# "பலாத்காரத்தால் சிறுபான்மைத் தமிழர் பிரச்னை தீராது"

Registered as a News paper in Ceylon வில சதம் 15

★★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 11
இதழ்: 344
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் தை 10 ஜுலகம் 14 வெள்ளிக்கிழமை [23-1-70]

## திரு. ஜி. ஜி. கருத்து

சாவகச்சேரி, வியாழன்
சிறுபான்மைத் தமிழர் பிரச்னையைப் பலாத்காரத்தில் தீர்க்கமுடியுமென்பதில் எங்களுக்குநம்பிக்கையில்லை சமரச மூலம் தீர்த்துவைக்கப்படும்.

இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணப் பிரதிநிதியுமான திரு ஜி ஜி பொன்னம்பலம் இன்று காலை சாவகச்சேரியில் 'தாமோதரம்பிள்ளை அரங்கில் தமிழ்க்காங்கிரஸ்வாலிப முன்னணி மாநாட்டில் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து பேசுகையில் தெரிவித்தார்.

சிறுபான்மைத் தமிழர்களுக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதை தமிழ்க்காங்கிரஸ் நன்கு உணர்ந்திருக்கிறதென்று குறிப்பிட்ட திரு. பொன்னம்பலம் சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதிநிதித்துவம் வழங்கும்வகையில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் தொகுதிகள் அமைக்கப்படவேண்டுமென்று முன்னர் சோல்பரிக் கமிஷனிடம் வற்புறுத்தியதைச் சுட்டிக்காட்டினார். இன்னும் ஆறு மாதகாலத்திற்குள் தொகுதி நிர்ணயக்கமிஷன் அமைக்கப்படுமென்றும் அக் கமிஷனிடம் சாட்சியமளிக்கும் போது சிறுபான்மைத் தமிழர்கள் ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய



வர்களைத் தெரிவுசெய்யக்கூடிய வகையில் தொகுதிகள் பிரிக்கப்படவேண்டுமெனத் தமிழ்க்காங்கிரஸ் வற்புறுத்துமென்றும் திரு. பொன்னம்பலம் கூறினார்

வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டார்.

# பல்கலைக்கழகங்களில் பிரச்னைகள் தோன்றுவதேன்?

## வண. தனிநாயகம் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென ஒரு பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழகங்கள் நிறுவவேண்டியது இங்கு நீண்டகாலமாக இருந்துவரும் ஒரு தேவையாகும். ஏனென்றல் பல்கலைக்கழகக்கல்வி விஸ்தரிப்பும் பல காலமாகவே புறக்கணிக்கப்பட்டுவந்துள்ளது. கல்வி அடிப்படையிலன்றி அரசியல் லாபங்களையும் அனுகூலங்களையும் உத்தேசித்து முடிவுகள் எடுக்கப்படுவதே இன்று பல்கலைக்கழகங்களில் தோன்றும் பிரச்சாரங்களுக்கு பெரும்பாலும் காரணமாக இருக்கின்றன.

இவ்வாறு வண. தனிநாயகம் அடிகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நிகழ்த்திய சொற்பொழிவின்போது குறிப்பிட்டார்.

திரு. கே. வி. தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அடிகளார் சொற்பொழிவு நிகழ்த்துகையில் ஹொங்கொங்கில் கண்டு பிடிக்கப்பட்ட கண்ணன், சிவன் சிலைகள் பற்றியும் குறிப்பிட்டதோடு, தான் பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தே தமி[illegible] ஆராய்ச்சி செய்ய விரும்புவதாகவும் குறிம்பிட்டார்.

தமிழ்மொழி ஆராய்ச்சி எனும் பொருள் பற்றி உரைநிகழ்த்திய அடிகள், தாம் பொதுச் செயலாளராகவிருக்கும் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நோக்கங்களைப் பற்றி விளக்கினர்.

## "தமிழினத்தின் எதிர்காலம் இளைஞர்கையிலேயே இருக்கிறது"

### தமிழ் காங்கிரஸ் மகாநாட்டில் வவனியா எம். பி.

மட்டுவில், வியாழன்
"இலங்கையில் இன்று நிலவும் அரசியல்நிலையில் தமிழ் பேசும் இனத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதும் நடுநிலையில் நின்று, சீர்தூக்கி ஆராய்ந்து, பொருளாதாரம், கலை கலாசாரத் துறைகளை உயர்த்தி தமிழினத்தின் அரசியல் நிலையை முன்னணிக்குக் கொண்டுதர வேண்டியதும் இன்று எமது இளைஞர் இயக்கத்தின் ஒரு முக்கிய கடமையாக அமைகிறது."

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற அகில இலங்கை[illegible] வாலிப முன்னணித் தலைவரும் உயர்நீதிமன்ற வழக்கறிஞருமான திரு எஸ் பி மயில்வாகனம் எதிர்கொண்டு மலர்மாலை சூட்டி, வருக! வருக! என்று வரவேற்றார் திரு தா சிவசிதம்பரம் எம் பி தனது தலைமையுரையில் தொடர்ந்து கூறியதாவது:-

**வேலையில்லாப் பிரசனை**

இன்று இளைஞர்களை எதிர்நோக்கியுள்ள அதிமுக்கிய பிரச்னையாகிய வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு எமது கட்சி பெரி[illegible]யது எமது கட்சியின்வாலிப இயக்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்றார்,

**விட்டுக் கொடுககக்கூடாது**

ஒரு அரசியல் கட்சி தனது அடிப்படை கொள்கைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கக்கூடாது அப்படி விட்டுக் கொடுப்பதாயின் அக் கட்சியின் அத்திவாரம் ஆட்டம்கண்டுவிடும் ஆனல் சமஷ்டிக் கட்சியோ தனது காலத்தில் படிப்படியாக விட்டுக்கொடுத்து விட்டது,

## 3 பிள்ளைகளுடன் தாய் தற்கொலை

அல்லைப்பிட்டி..வியாழன்
முப்பதுவயதுடைய இளம் பெண் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுடன் ஊர்காவற்றுறை-வேலணை பிரதான வீதியிலுள்ள நீர்த்தேக்கமொன்றில் வீழ்ந்து நேற்று தற்கொலை செய்து கொண்டார். காலம்சென்ற கோபாலசிங்கம் சிவக்கொழுந்து தனது மூன்று வயதுக்குழந்தைகளாகிய வில்லிமலர் (வயது 7), பிரேம்குமார் (வயது 5), நகுலேஸ்வரன் (வயது 2) என்னும் மூன்று குழந்தைகளையும் மேற்படி நீர்க்குழியில் வீசிவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். இது சம்பந்தமாக வேலணைப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் விசாரணை நடாத்தினர். வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்திகாரணமாக தற்கொலை செய்து கொண்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டது. ஊர்காவற்றுறைப்பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் இயக்கத்தின் ஒரு முக்கிய கடமையாக அமைகிறது.''

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் 25-வது ஆண்டு மக நாட்டின் இரண்டாம் நாள நிகழ்ச்சியான இன்று வாலிபர் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிப் பேசிய வவனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. தா சிவசிதம்பரம் கூறினர்.

தாமோதரம்பிள்ளை அரங்கில் நடைபெற்ற வாலிபர் மகாநாட்டிற்கு கிளிநொச்சிப் பகுதியிலிருந்து நால்வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட உழவு யந்திரங்கள், மோட்டார் கார்கள் கொண்ட வாலிபர்களின் பெரிய ஊர்வலம் ஒன்று திருவீ ஆனந்தசங்கரியின் தலைமையில் நண்பகலில் மகாநாட்டு மண்டபத்தை வந்தடைந்தது

இந்த ஊர்வலத்தை தென்மராட்சியின் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்

இன்று இளைஞர்களை எதிர்நோக்கியுள்ள அதிமுக்கிய பிரச்னையாகிய வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு எமது கட்சி பெரிதும் உழைக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. அதற்கான வழி வகைகளையும் ஆராய்கிறது இந்த ரீதியில் எமது மத்தியிலே வாலிபர்களுக்கு அரசாங்க சேவையில் பேனு பிடிக்கும் உத்தியோகத்தைத் தவிர்ந்து, கைத்தொழில் விவசாயம், நுண்கலைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபடச் செய்வதை எமது கட்சி பெரிதும் விரும்புகிறது இப்படியாகவிவசாயத் துறையில் ஈடுபடுவதனுல் நாம் என்றும் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தலைநிமிர்ந்து வாழ முடியும்,

எமது இனம் இதுவரை காலமும் இழந்த உரிமைகளைனத்தையும் மீண்டும் பெற்று தமிழினத்தையும் இந் நாட்டில்வாழும் ஏனைய இனத்துடன் சரிநிகர்சமானமாக வாழவைக்க வேண்டி

வாரம் ஆட்டம்கண்டுவிடும் ஆனுல் சமஷ்டிக் கட்சியோ தனது காலத்தில் படிப்படியாக விட்டுக்கொடுத்து விட்டது,

தென் மராட்சி வாலிப முன்னணித் தலைவரும் உயர் நீதிமன்றவழக்கறிஞருமான திரு எஸ் பி மயில்வாகனம் பேசுகையில், அரசியல்ஞானமும் திறமையும் கொண்ட தலைவர்களால் வழிநடத்தப்படும்போதுதான் வாலிபர்கள் உயர்வை அடைய முடியும் இன்று வாலிபர்கள் உண்மைத் தலைவர்கள் யார் என்பதை உணர்ந்து விட்டார்கள் அவர்கள் அமைதி கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய வழிகளில் நின்று உழைக்க வேண்டும்,

திரு ஆனந்தசங்கரி, திரு மகேந்திரராஜா சாவகச்சேரி வாலிப முன்னணிப் பிரதிநிதி திரு ஏ குணரத்தினம் திருமாணிக்கவாசகர் திரு ரி, சண்முகநாதன் திரு ரி, ஆர் இராஜகுலேந்திரன் உட்பட பலரும்பேசினர்,

# "அபாயத்திலிருந்து காப்பாற்றுக"

## தொழிலாளர் மகாநாட்டில் ஜி. ஜி. யிடம் வேண்டுகோள்

மட்டுவில், வியாழன்

1964-ம் ஆண்டில் உற்பத்திவரி சுருட்டுக்கு 3 வீதமாக இருந்தது. 1966-ம் ஆண்டு 5 வீதமாகியதனுல் எங்கள் தொழில் பாதிக்கப்பட்டது எங்கள் தலைவர் அவர்களே எங்களுக்கு அனுசரணையாக இருந்து இந்த வரியைக் குறைத்துதொழில் அற்றுப் போகாமல் காப்பாற்றினுர் ஆனுல் இன்னும் இதைத் தொடர்ந்து நிற்கும் அபாயம் 1967 க்கு முன் செலுத்தப்பட வேண்டிய வரித்தொகையை பீடியுடன் அறவாக்குவதத்கு வழக்குத் தொடர வருமான வரிக் கந்தோர் ஒருசிலருக்கு கடிதங்கள் அனுப்பியிருக்கிறுர்கள் ஆனுல்சட்டத்தை சரிவர அமுலுக்கு கொண்டு வந்தால் நிரந்தரமாகத் தொழில் செய்கிறவர்களில் குறைந்த பட்சம் 40 வீதம் தாக்கப்பட்டுவேலையற்றவர்களாயிருக்க நேரிடும். இதை

( 4-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் வாலிப முன்னணி புதிய நிர்வாகிகள்

மட்டுவில், வியாழன்

அகிலஇலங்கை தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணிதலைவராகவவனியாஆட்சிமன்ற உறுப்பினர் திரு தா சிவசிதம்பரம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இத் தெரிவு அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் வெள்ளி விழா மாநாட்டில் இன்று நடைபெற்றது.

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளைஅரங்கில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு தா சிவசிதம்பரம் எம், பி தலைமையில் நடைபெற்றஇந்த வாலிபர் மாநாட்டில் கீழ்க் காண்போர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வவனியா ஆட்சி மன்ற உறுப்பினர் திரு தா சிவசிதம்பரம், உப தலைவர்கள் திரு ஸி, மோதிலால் நேரு திரு, என், சிவனேசன்

(4-ம் பக்கம் பார்க்க)

ஜி ஜி. சொல்கிருர்:

# மறியலுக்கு போவேன்; ஆனுல்...'

மட்டுவில், வியழன்

வருமானவரி அலுவலகத்திலிருந்து எனக்குச் சிங்களத்தில் கடிதம் வந்தால் நான் அதைதிருப்பி அனுப்பிவிடுவேன் வரிகட்டாமல் மறியலுக்கு போனுலும் போவேனே தவிர சிங்களக் கடிதத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

இவ்வாறு பலத்த கரகோஷத்திற்கிடையே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு ஜி ஜி பொன்னம்பலம் சாவகச்சேரியில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ மகாநாட்டில் நேற்று பேசும்போது ஒரு கூட்டத்தில் கூறினுர். அவர் மேலும் சொன்னுர்,

எனக்கு அரசாங்கத்திலிருந்து எளிதில் சிங்களக் கடிதம் வருவதில்லை இப்படியிருந்தபோதிலும் இரண்டொரு கடிதம் அனுப்பிவிட்டார்கள் ஆனுல் நான் அவற்றை ஏற்காது திருப்பியனுப்பி விட்டேன்,

தமிழ்மொழி ஆராய்ச்சி எனும் பொருள் பற்றி உரைநிகழ்த்திய அடிகள், தாம் பொதுச் செயலாளராகவிருக்கும் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் நோக்கங்களைப் பற்றி விளக்கினர்.

அவ[illegible]ம் கூறியதாவது:

வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தேசிய பல்கலைக் கழகம் (அல்லது பல்கலைக் கழகங்க) நிறுவுவதில் நீண்டகாலமாகத் தாமதம் ஏற்பட்டு வருகிறது. பல்கலைக்கழகக்கல்வியை விஸ்தரிப்பதில் நீண்ட காலமாக ஏற்பட்ட அலட்சியமே இத் தாமதத்திற்கு காரணமாகும். அரசியல் நன்மைகருதி அரசியல் அனுகூலங்களுக்கு கூடிய முக்கியத்துவம்கொடுத்து கல்வியையடிப்படையாகக் கொள்ளாது அரசியலையே அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களையெடுப்பது இன்று பல்கலைக் கழகங்களில் எம்மைச் சூழ்ந்தள்ள பிரச்சினைகளுக்குக் காரணமாகும். இலங்கையின் 5 வது பல்கலைக்கழகமாக வமையும் இப்புதிய பல்கலைக்கழகம்தான் சேவை செய்யும் மாணவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் பிரதான நிலையமாக விளங்குவதோடு விஞ்ஞான, தொழில் நுட்ப, கலை ஆகிய துறைகளில் பட்டம் பெற்றவர்கள் ஆராய்ச்சிக் கல்வி பெறவும் வாய்ப்பளிக்க வேண்டும். அடுத்த பத்திலிருந்து 30 வருடங்களுக்கான பல்கலைக்கழகக் கல்வியைத் திட்டமிடும பொழுது நாட்டின் ஒன்பதுமாகாணங்களிலும் பட்டப்படிப்புக்கான இடங்களின் நிலையங்கள் கட்டாயமாகத்தேவைப்படுகின்றன. இவைகளில் சிலவற்றில் உயர் பட்டப்படிப்புக்கான கல்விககும் ஆராய்சிக்கல்விககும் இடமளிகக வேண்டும். மாணவர்களை அனிமதிககும் விடயத்தில் அதிகரித்துக கொண்டுவரும் கலைப்பட்டதாரிகள்தொகையைக குறைத்து தற்போதுள்ள சமனற்ற நிலையைப் போககுவதற்கு விஞ்ஞானக்கல்விக்கு 60 வீத மாணவர்களையும், கலைக் கல்விககு 40 வீதமாணவர்களையும் அனுமதிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். நடுநிலைமை தவருத பல்கலைககழக மான்ய கமிஷனென்று பல்கலைகழக இலாகாக்களும் பிரிவுகளும் வீணுக இரு பகுதிகளாவதை தடைசெய்வதோடுஉயர் கல்வியில் நாட்டின் தேவைகளுககு உதவுவதில் பல்கலைக்கழகங்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்து ஒத்துழைப்பதையும் பார்வையிட வேண்டும்.

பட்டதாரிகள் தொகை மேன்மேலும் அதிகரித்துக் கொண்டு வருவதால் நாடு பல் வேறு துறைகளிலும் தகைமை வாய்ந்த தலைவர்களை உயர்பட்டதாரிகளிடையே பெற விளையும்.

ஆனுல் இப்பொழுதுகூட உயர் பட்ட கல்வியும், ஆராய்ச்சிக் கல்வியும் போதிய அளவு இல்லாது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. புகழ் பெற்ற உயர் கல்லூரிகளுக்கும் தொழில் நுட்ப நிறுவனங்களுக்கும் கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் என்ற பெயரைக் கொடுத்துப் பல்கலைக்கழக கல்வியை பிலிப்பைன்ஸ் போன்ற சிலநாடுகளில் நடைபெற்றுள்ளது போல மலிவாக்கி விடக்கூடாது. ஆசிய நாடுகள் சில

4-ம் பக்கம் பார்க்க

# அமைச்சரின் வயதும் கைப்பிரம்பும்

அமைச்சர் பிலிப்குணவர்த்தனுவுக்கு 70 வயதாகிவிட்டதால் அவரை வயோதிபர் என்கிருர்கள். ஆனுல் அவர் என்றும்இளைஞர்தான் அவர் இன்னும்பலகாலம்வாழ வேண்டும் என்று சங்கானையில் நடந்த கூட்டத்தில் திரு.அமிர்தலிங்கம் எம்.பி.சொன்னுர்.

அடுத்து திரு.வி.தர்மலிங்கம் எம்.பி.பேசுகையில் மாக்ஸியத் தந்தையான ஹொஸிமின் 79 வயது வரை வாழ்ந்தவரென்று அமைச்சர் பிலிப்பே அண்மையில் ஆட்சிமன்றத்தில் கூறினுரென்றும், எனவே பிலிப்பும் 79வயதுவரை இருப்பாரென்றும் சொன்னுர்.

அமைச்சர் பதிலளித்துப்பேசுகையில் தன்னை 'கிழவன்' என்று நினைத்தே பலரும் பலவாறு பேசுவதாகவும், ஆனுல் தான் 9 வருட மல்ல இன்னும்பல்லாண்டு காலம் சேவை செய்ய விரும்புவதாகவும் சொன்னுர்.

அடுத்து சங்கானை வடிவேலு ஆச்சாரியர் பல்வேறுமரங்களால்செதுக்கப்பட்ட கைப்பிரம்பு ஒன்றை அமைச்சருக்கு அன்பளிப்புச் செய்தபோது ''இது இனி எனக்குத் தேவை தான்'' என்று அமைச்சர் சொல்லஅனைவரும்சிரித்தனர். (கா.நி)

...தைகளாகிய வில்விமலர் (வயது 7), பிரேம்குமார (வயது 5), நகுலேஸ்வரன் (வயது 2) என்னும் மூன்று

கப்பட்டது. ஊர்காவற்றுறைப்பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

நான்கு லட்சம் ரூபா பெறுமதியான

# ஆடம்பர, ரசாயன பொருளுடன் 2 வள்ளங்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கள்ளக் கடத்தல் வள்ளங்களை காரைநகர் கடற்படையினர் அடுத்தடுத்து கைப்பற்றிய சம்பவம் வடபகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலாவதாக எழுவைதீவுக்கு அருகாமையில் ஒரு வள்ளம் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான இந்தியப் பொருட்களுடன் கைப்பற்றப்பட்டது.

கடற்படையினர் இவ்வள்ளத்தைத் துரத்திச் சென்றதாகவும், வள்ளக்காரர் ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வள்ளத்திலிருந்து புடைவைகள், முடிமயிர்கள், குஞ்சங்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது மற்ருெரு வள்ளம் மயிலிட்டிக்கும் காங்கேசன்துறைக்கு மிடையில் கடலில் ஒருமைல் தூரத்தில் கைப்பற்றப்பட்டதாம்.

22பீப்பாக்களில் அடைக்கப்பட்ட 'ஹைட்ரோக்குளோரேட்'' என்ற இரசாயன பொருள் இவ்வள்ளத்தில் தேடுவாரின்றிக் கிடந்தது. இரண்டு வள்ளங்களும் மாலை நேரத்திலேயே கைப்பற்றப்பட்டன.

இரண்டு சம்பவங்கள் சம்பந்தமாகவும் விசாரணை நடாத்திய கச்சேரி உதவியாளர் திரு. கா. கந்தசாமி வள்ளங்களையும் சாமான்களையும் பறிமுதல் செய்தார். (கா. நி)

# கல்லுண்டாய் உப்பளம் கூடிய விரைவில் அபிவிருத்தியாகும்

## அமைச்சர் பிலிப் வாக்குறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

''கல்லுண்டாய் உப்பளத்தைஅபிவிருத்திசெய்ய வேண்டியதன் அவசியம் பற்றி பலரும் என்னிடம் வற்புறுத்தியுள்ளனர். அது எனது அமைச்சின் கீழுள்ள விஷயம். இதுபற்றிய அறிக்கை ஒன்றை எனக்குச் சமர்ப்பிக்குமாறு உப்புக் கூட்டுத்தாபனத்திடம் நான் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளேன். குறுகிய காலத் திட்டத்தில் கல்லுண்டாய் உப்பளம் அபிவிருத்திசெய்யப்படும்''

வலிமேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்துக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனு இவ்வாறு தெரிவித்தார்

சங்கானை மின்தறி நிலையத்தை திறந்து வைத்தார். அமைச்சரும் குழுவினரும் சமாஜ முன்றலிலிருந்து வேம்படி மகளிர் கல்லூரியினரின் 'பான்ட்' வாத்திய இசை, நாதஸ்வர இசைகளுடன் ஊர்வலமாக மின்தறி நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

சங்கானை கிராமசபைத் தலைவரும் உறுப்பினர்களும் அமைச்சருக்கு மாலையிட்டனர். மின்தறிநிலையத்தைத் திறந்து அதனைப் பார்வையிட்டபின்னர் சமாஜத் தலைவர் திரு. இராஜசுந்தரம் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

திரு. அமிர்தலிங்கம் எம்.பி. பேசுகையில், இலங்கைச் சரித்திரத்தின் மறக்க முடியாக சம்பவங்களில் பெயர் பெற்ற ஒரு அரசியல்தலைவர் அமைச்சர் பிலிப் குணவர்த்தனுவென்றும், மாக்ஸீயக் கொள்கைகளைப் பரப்பிய இவர் விவசாய அமைச்சராகக்கடமையாற்றிபோதிய அனுபவத்துடனேயே கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சரானுர் என்றும் எனவே எமது அவசிய தேவைகளை இவர் பூர்த்தி செய்வார் என்பதில் நம்பிக்கையுண்டு என்றும் பிசான்னுர்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கல்லுண்டாய் உப்பளத்தை அபிவிருத்திசெய்ய வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினுர்.

அமைச்சர் பதிலளித்துப் பேசியதாவது:

கிராமப்புற மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதற்காகவே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 1956-ம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டன. 1959-ம் ஆண்டுக்குள்ளே இந்த ஸ்தாபனங்கள் அதிகரிக்கப்பட்டன.

இச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் குறுகிய காலத்துள்ளேயே நிறைவேற்றப்பட்டது. இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

பொருளாதார, கலாச்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. பி.யாக நியமனம்

வேலணை, வியாழன்

கரம்பனைச்சேர்ந்த திரு. இ. மாணிக்கம சமாதான நீதிபதியாக நியமனம்பெற்றுள்ளார். சமூகத்தொண்டரும், பிரபல வர்த்தகருமான இவர் நேற்றுமுன்தினம்ஊர்காவற்றுறை நீதிபதி திரு. டயஸ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் ஒரு விளையாட்டு வீரருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மிளகாய்க் கன்றுகள், மாஇலுப்பள்ளம உயரினம் உடன் விற்பனைக்குள்ளன. விலை ஒரு சதம். அ. சண்முகரத்தினம், படித்த வாலிபர் திட்டம், 2-ம் படிவம், வலதுகரை, ஒட்டுசுட்டான். 1781

நல்ல நிலைமையிலுள்ள தட்டச்சு ஆங்கிலம் (Portable Imperial Typewriter English) ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலிருக்கும் மலாயா-இலங்கையர் சங்கத்தில் விற்பனைக்குண்டு. காலை 10 மணி தொடக்கம் 12 மணி வரை பார்வையிடலாம். விபரங்கள் நேரில் கௌரவ காரியதரிசி. 1784

புகையிலைகள்:

சகல வகைச் சுருட்டுப் புகையிலைகள் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனைக்குண்டு. த. அருமைத்துரை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 1779

---

வட இலங்கைச் சங்கீத சபை

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சபையால் 1968-ம் ஆண்டுவரை நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்குரிய தராதரப் பத்திரங்கள் ஏறக்குறைய அனுப்பப்பட்டுவிட்டன. எனினும், தபால் விலாசம் போதாமையால் அனுப்பாத சில தராதரப்பத்திரங்களும், பரீட்சைக்குத் தோற்றியகாலத்தில் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கு அனுப்பித் திரும்பிவந்த சில தராதரப்பத்திரங்களும் மேற்படி சபை அலுவலகத்தில் இருக்கின்றன. எனவே இதுவரை தங்கள தராதரப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாதோர் கீழ்வரும் விபரங்களுடன், தலைவர், வட இலங்கைச் சங்கீதசபை, வித்தியாபகுதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குக் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

விபரங்கள்

(I) முழுப்பெயர்..............
(II) பரீட்சையில் சித்தியடைந்த ஆண்டு..........
(III) சித்தியடைந்த பகுதியும் பாடங்களும்........
(IV) சுட்டிலக்கம்....................
(V) தராதரப்பத்திரம் அனுப்ப வேண்டிய தபால் விலாசம்...................

எஸ். தணிகாசலம்
தலைவர்,
வட இலங்கைச் சங்கீத சபை,
வித்தியாதிபதி, வடபிரதேசம்.

தொடர்பு இல: E/C.
வடஇலங்கைச் சங்கீத சபை, வித்தியாபகுதி,
கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம். 17-1-1970. 1918

---

# கேள்வி விளம்பரம்

## நகரசபை, பருத்தித்துறை

1970-ல் பின்வரும் பொருட்களை சப்ளைசெய்வதற்கு பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் ஜனவரி29-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சீல் வைக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மாலை 3 மணிவரை (ஜனவரி 27 வரை) பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| பொருள் | டெண்டர் 'டிபாஸிட்' | டெண்டர்பத்திர கட்டணம் |
|---|---|---|
| மின்சார உபகரணங்கள் 'சப்ளை' | ரூ. 250-00 | ரூ. 25-00 |
| எழுதுபொருட்கள் அசுகடதாசிகள் 'சப்ளை' | ரூ. 50-00 | ரூ. 10-00 |
| சுகாதார, வேலைப்பகுதி பண்டகசாலைக்கு சப்ளை | ரூ. 50-00 | ரூ. 10-00 |

வி. தர்மலிங்கம்.
தலைவர், நகரசபை,
நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை.
18-1-70.

1924

---

### ஆயுள்வேத டாக்டர் தேவை

ஆயுள்வேத வைத்தியசாலையில் பட்டம்பெற்று, பதிவுசெய்யப்பட்ட வைத்தியர் ஒருவர் தொழிற்சாலையையும், டிஸ்பென்சரியையும் நடாத்துவதற்கு தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஓமவாட்டர், பன்னீர், பற்பொடி தயாரிக்கும் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பமுடிவு திகதி 28-1-70.

தெரிவு செய்யப்படுபவர்கள் உடன் ஒப்பந்தம் செய்து வேலையை பொறுப்பேற்கவேண்டும். விபரங்கட்கு திருமதி பொ. பத்மாவதி (உரிமையாளர்) பத்மா பாமக்கியூட்டிக்கல் இன்டஸ்றீஸ், புளியங்கூடல். 1481

---

ஊர்காவற்றுறை நகர பாதுகாவலர் சங்கம்

### இரவுக்காவலாளர் பதவிகள் வெற்றிடம்

ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் உள்ள கடைகளுக்குப் பாதுகாப்பு அளிக்குமுகமாக இரவுக் காவலாளர் இருவர் தேவை. மாதாந்த வேதனம் ரூபா 100/- வீதம் வழங்கப்படும்

தகைமைகள்:

1. ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
2. வயது 25 முதல் 35 வரை.
3. திடகாத்திரமுள்ள சுகதேகியாய் இருத்தல் வேண்டும்.
4. பிணைப்பணமாக ரூபா 250/- செலுத்தல் வேண்டும். ரூபா 100/- முதலில் செலுத்த வேண்டும். பாக்கிப்பணம மாதாந்தம் சம்பளத்தில் ரூபா 10/- வீதம் கழிக்கப்படும்.

தகுதியுடையவர்கள், தமது விண்ணப்பங்களை, தகுதிவாய்ந்த ஒருவரிடமிருந்து பெற்ற நற்சான்றுப் பத்திரத்துடன் சேர்த்து 31-1-70 அன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் வண்ணம் கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

ந. ட. பங்கராசா,
செயலாளர்,

ஊர்காவற்றுறை நகர பாதுகாவலர் சங்கம்,
ஊர்காவற்றுறை. 1480

---

## வீதி திருத்த நடவடிக்கை

வேலணை, வியாழன்

வேலணை பெருங்குளம் அம்மன் கோவில் வீதி சென்ற சில ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருந்து வருவதால் போக்குவரத்துக்கஷ்டம் ஏற்பட்டுள்ளது. என இப்பகுதி மக்கள் பண்டிதர். கா.பொ.இரத்தினத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து யாழ். கண்காணிப்புப் பொறியியலாளருடன் பண்டிதர் கடிதமூலம் தொடர்பு கொண்டதையடுத்து இவ்வீதி திருத்வதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்ற நிதிஆண்டில்ஒதுக்கப்பட்ட 1360ரூபாவில் எவ்வளவு இவ்வீதியைத்திருத்தச்செலவு செய்யப்பட்டது என்பது பற்றியும் கடிதமூலம் சம்பந்தப்பட்டவர்களை இவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மண்கும்பான் சாட்டி வேலணை வீதியைத் திருத்தி இ.போ.ச பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் திரு.கா.பொ சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுள்ளார்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 23—1—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.
பகல் 12-00, 12-45, 1-30.
மாலை 4-25, 5-00, 6-00.
திரைகானம்: பகல் 12-03, 1-0?.
இரவு 7-15 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம்.

---

தமிழில்

## தொழிற் சங்கக் கருத்தரங்கு

கோட்டை, வியாழன்

இலங்கையில் முதல் முதலில் தமிழில் தொழிற்சங்கக் கருத்தரங்கொன்றை, அஞ்சல் தொலைதொடர்புச் சேவையாளர் சங்கத்தினர் இம்மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரையில் நடாத்தவிருக்கின்றனர்.

அகிலதேச தபால் தந்தி தொலைபேசி இயக்கத்தினரின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக அவ்வியக்கத்தின் ஆசியக் கல்விப்

---

# மயிலிட்டி துறைமுகத்தை விஸ்தரித்துத் தருக'

### — அமைச்சருக்கு மகஜர்

மாவிட்டபுரம், வியாழன்

''மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் திருப்பூர் மக்கள் பயன் பெறும் வகையில் விஸ்தரித்து அமைக்க வேண்டும்''.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை மயிலிட்டி திருப்பூர் அண்ணாபடிப்பகம் அப்பகுதி கடற்றொழிலாளர்களின் சார்பில் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் பிலிப் குணவர்த்தனாவிடம் அளித்தது.

வடக்கில் விஜயம் செய்யும் அமைச்சரிடம் வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு ஏ அமிர்தலிங்கம் மூலமாக அளிக்கப்பட்ட இம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மயிலிட்டி கடற்றொழிலாளர்கள் மீன் பிடித் தொழிலை விருத்தி செய்யவும், தொழிலைப் பெருக்கவும் மயிலிட்டியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்பட்டு வருகிறது

இத் துறைமுகம் கட்டப்படுவதால் திருப்பூர்கிராமத்தை சேர்ந்த மீனவருக்கு பயன் இல்லை. இப்பகுதியில் உள்ள 100 க்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வதியும் பகுதியில் இத்துறை மாட்டாது.

ஆதலால் திருப்பூர் கடற்றொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் இத்துறைமுகத்தை 75 யார் விஸ்தரிக்க வேண்டும் எனறுகோரப்பட்டுள்ளது.

---

## சங்கானை வெற்றி

சுழிபுரம், வியாழன்

சங்கானை மேற்கு சனசமூக நிலைய கரபந்தாட்டக் கோஷ்டிக்கும், சில்லாலை கரபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற போட்டியில் சங்கானை மேற்கு சனசமூக நிலையக் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

திரு எஸ். கணபதிப்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலில் பிரதி வெள்ளி வாரந்தோறும் நடைபெற்றுவரும் பெரியபுராண விரிவுரையில் மூர்த்திநாயனார் என்னும் சரித்திரம் இடம் பெறு

---

# கலாநிதி ஜே. ஜீவரட்ணம்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் பதில் தொழிலதிபர் கலாநிதி ஜே. ஜீவரத்தினத்தின் அகால மரணம் சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்குப் பேரிழப்பாகும்.

கலாநிதி ஜே. ஜீவரத்தினம் 1951-ம் ஆண்டு அரசாங்க சிமெந்துத் தொழிற்சாலையில் சோந்து இரசாயனவியலாளராகக் கடமையாற்ற ஆரம்பித்தார். சேவையிலிருக்கும்பொழுதே 1959-ம் ஆண்டு தனது கல்வியை மேலும் விருத்தி செய்வதற்காக இங்கிலாந்து சென்றார். அங்கு இரசாயனத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பிய அவரை அரசாங்கம் சிமெந்து கூட்டுத்தாபனத்தின் பிரதான இரசாயனவியலாளராக நியமித்தது. 1967-ல் உதவித் தொழிலதிபராகவும் பின்னர் 1969-ல் பதில் தொழிலதிபராகவும் கலாநிதி ஜீவரத்தினம் நியமிக்கப்பட்டார். மேலும் இவர் சிமெந்து இரசாயனவியல் பற்றி ஜப்பானில் நடைபெற்ற 5-வது சர்வதேச மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இத்தகைய அறிவாற்றல் வாய்ந்தவரான கலாநிதி ஜீவரத்தினம் தனது சேவை நாட்டின் தொழிலாக்கத்திற்கு நல்கவேண்டிய இவ்வேளையில் தனது 43-வது வயதில் மரணமான[illegible]கியமாகச் சிமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கும் குடும்பத்தார் நண்பர்கள் யாவருக்கும் பெரும் நஷ்டமாகும்.

— ஓர் அன்பர்

---

## இலங்கை ஹோட்டலுக்கு பிரிட்டிஷ் பொருட்கள்

தெஹியோவிட்டவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய சர்வதேச ஹோட்டலான ''பெகாஸஸ் ரீவ்'' ஹோட்டல் பிரிட்டனிலிருந்து பத்தாயிரத்துக்கும் அதிகமான கத்தி, கரண்டி வகைகளை பெறவிருக்கிறது. இவை அனைத்தும் துருப்பிடியா உருக்கினல் ஆக்கப்பட்டவையாகும். இதற்கான கோரிக்கை ஏற்கனவே ஒரு பிரிட்டிஷ் நிறுவனத்திற்கு வழங்கப்படடிருககிறது.

நவீன அமைப்புகளில் வெள்ளிச்சாமான்களைச் செய்வதில் உலகப்பிரபல்யம் பெற்ற 'வின்னஸ் லிமிட்டட்' எனப்படும் பிரிட்டிஷ் கம்பனியே இவற்றை இலங்கைக்கு வழங்கவிருக்கிறது. அடுத்தமாத முடிவிற்குள் இப்பொருடகள் அலங்கை வந்துசேரும்.

---

## அப்பல்லோ 12 திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 24-ந் திகதி சனிக்கிழமையும் 25-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6-30 மணிக்கு அமெரிக்கதகவல் பகுதியினர் யாழ். திறந்த[illegible]வெளியரங்கில் 'அப்பல்[illegible] 12' திரைப்படத்தைப் பொது மக்களுக்குக் காண்பிப்பார்கள்.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய[illegible]

---

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியா.

காங்கேசன்துறை கல்வி நிலைய மாணவர் மன்ற வருடாந்தக்கூட்டம் நிலைய அதிபர் திரு. வி. விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது, இக் கூட்டத்தில் கீழ்க்கண்டோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சி தவராசா உபதலைவர் எஸ் இ தவராசா. காரியதரிசி: அ தேவராசா, உபகாரியதரிசி: பி புஸ்பகுமார், தனாதிகாரி: ஆர் ரவீந்திரன், 6 பேர் கொண்டநிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## ஸ்கந்தா புதிய அதிபர்

உடுவில், வியாழன்

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் புதிய அதிபராக திரு. ஏகாம்பரம் பதவிஏற்றுள்ளார். வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய இவர் முன்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினர்.

---

## 'காந்தி, யேசு போன்றோரை பின்பற்றுங்கள்'

### —சாவகச்சேரி எம்.பி.

மட்டுவில். வியாழன்

''உண்மை, அகிம்சை, பொறுமை, எதிரிகளையும் அன்பால் நேசித்தல்போன்ற உத்தம குணங்களை கடைப்பிடிப்பதின் மூலமே, மனிதன், மனிதனுக வாழ்வதுடன், ஒற்றுமையும் அன்பும், கூட்டுறவும் கொண்ட ஒரு சமுதாயத்தையும் உருவாக்கமுடியும்'' என மட்டுவில் பகுதியிலுள்ள தமிழரசு வாலிப முன்னணிகளைக் கூட்டி நடத்திய பொதுக் கூட்டத்தில், சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ ந. நவரத்தினம் பேசுகையில் கூறினர். திரு, சின்னையாகந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது

'இன்றைய வாலிபர்கள் தான் எதிர்கால சமுதாயத்தை நல்லவழியில்கொண்டு செலுத்தவேண்டிய, தலைவர்கள்.

நல்ல எண்ணங்களை நாம் கடைப்பிடிப்பதற்கு முதலில், காந்தி, யேசுநாதர்

---

## துரித நடவடிக்கை

கைதடி, வியா

தென்மராட்சிப் பகுதியில் பொலிசாரின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகளைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பூராவும் பொலிசார் வாகனத்தில் சென்று ஒலிபெருக்கி மூலம் பொதுத்தேர்தலைக் காரணமாக வைத்து அசம்பாவித நிகழ்ச்சிகளில் ஈடுபடவேண்டாமென தெரிவித்தனர். மதுபோதையில் சந்திகளில் நிற்பவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப் படுவார்களென பொலிசார் எச்சரிக்கை விடுத்தனர்.

......

## அடையாள அட்டைதரவும் மீனவர் அவதி

வேலணை, வியாழன்

வேலணை கிழக்கு செட்டிபுலத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர்களில் பலர் அடையாள அட்டை பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தினுல் பெரிதும் அவதிக்குள்ளாகியுள்ளனர். கைப்படங்கள் அனுப்பி 6 மாதங்களாகியும் இதுவரை அடையாள அட்டை கொடுக்கப்படவில்லையாம். இதனுல் மன்னர்வரை சென்று தொழில்

---

3 அதிரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி இயக்கத்தினரின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இக் கருத்தரங்கில் பங்குபற்றுவதற்காக அவ்வியக்கத்தின் ஆசியக் கல்விப் பிரதிநிதி திரு கென் ஹச்சிசன் விமானமூலம் வந்துள்ளார்.

படுவதால் திருப்பூர்கிராமத்தை சேர்ந்த மீனவருக்கு பயன் இல்லை. இப்பகுதியில் உள்ள 100 க்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் வதியும் பகுதியில் இத்துறைமுகம் அமையாததால் அத்தொழிலாளர்கள் தமது தொழிலைப் பெருக்க இத்துறைமுகம் வழிவகுக்க

வளைப் பிள்ளையார் கோவிலில் ... வெள்ளி வாரந்தோறும் நடைபெற்றுவரும் பெரியபுராண விரிவுரையில் மூர்த்திநாயனார் என்னும் சரித்திரம் இடம் பெறுகிறது. இதனை அருட்கவி சஞ்சீவி விஞசித்தம்பி நடத்துகிறார்.

தைப் பொது மக்களுக்குக் காண்பிப்பார்கள்.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய ஆதரவில் நடைபெறும் மேற்படி திரைப்படக் காட்சிகளைக் காணவருமாறு அனைவரையும் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

## இடமாற்றம்

கோப்பாய், வியா.

...ருகலை அரசினர் தமிழ் ...கா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய திரு. எஸ். சோமாஸ்கந்த ஐயர் அனுரதபுரம் விவேகானந்த வித்தியாலயத்துக்கு இம்மாதம் 15-ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தாபனத்திற்கும் குடும்பத்தார் நண்பர்கள் யாவருக்கும் பெரும் நஷ்டமாகும்.

— ஓர் அன்பர்

## 3 ஆசிரியா நியமனம்

விஸ்வமடு, வியா.

தருமபுரம் 2-ம் இலக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 3 ஆசிரியைகள் நியமனம் பெற்றுள்ளனர். காரைநகரைச் சேர்ந்த செல்வி ஜெயலட்சமி ஜீவரத்தினம், கச்சாய் செல்வி வேலுப்பிள்ளை திரவியநாயகி. தருமபுரம் திருமதி பரமேஸ்வரி முருகேசு ஆகியோரே நியமனம் பெற்றவர்களாவர்.

பதவி ஏற்றுள்ளார். வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய இவர் முன்னர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினர்.

## 120 வயதில் காலமானர்

கோப்பாய், வியாழன்

கோப்பாயைச் சேர்ந்த திரு. சின்னட்டியார் என்பவர் தமது 120 வயதில் நேற்றுக்காலமானர்.

கோப்பாய் கி. ச. வின் முன்னுள் தலைவர் திரு.பொ. தி. சம்பந்தரின் மாமனுரான இவரே இக்கிராமத்தில் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தவராவர்.

தான் எதிர்கால சமுதாயத்தை நல்லவழியில்கொண்டு செலுத்தவேண்டிய, தலைவர்கள்.

நல்ல எண்ணங்களை நாம் கடைப்பிடிப்பதற்கு முதலில், காந்தி, யேசுநாதர் போன்றோரின் அறபோதனைகளை மனதிற்கொண்டு, பொறுமையும் சாந்தமும், பகுத்தறிவை உபயோகிக்கவும் பழகிக்கொள்ளவேண்டும் என்று கூறினுர்.

னுல் பெரிதும் அவதிக்குள்ளாகியுள்ளனர். கைப்படங்கள் அனுப்பி 6 மாதங்களாகியும் இதுவரை அடையாள அட்டை கொடுக்கப்படவில்லையாம். இதனுல் மன்னுர்வரை சென்று தொழில் செய்ய முடியாதிருப்பதாக இவர்கள் அரசாங்க அதிபரிடம் முறையிட்டுள்ளனர்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



சக்தி வாய்ந்த
சர்வ பூச்சி நாசினி
பொலிடோல் ஈ-605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரு. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரு. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரு. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்: பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்: ஹேக்கெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P.993


## இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

[தை மாதம் 10-ம் திகதி 23-1-70]

**மேஷம்**- தொழில்துறையில் நல்ல வருமானம் கிடைக்கும். வணிகர்களுக்கு ஆதாயம் உண்டு. புதிய உடன்படிக்கையின் மூலம் நல்ல திருப்பம் ஏற்படும். மகிழ்ச்சிகரமான பிரயாணமும் உண்டு.

**ரிஷபம்**- வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப்பணம் துள்ளும். புதிய நண்பர்களையும் தேடிக்கொள்வீர்கள். நீண்டநாள் கனவு இன்று நனவாகலாம். சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.

**மிதுனம்**- சமயோசித புத்தி உங்களுக்கு தாராளமான சிந்தனைகளைத் தேடித்தரும். மக்கள் மூலம் மகிழ்ச்சிரமான சம்பவங்கள் இடம்பெறும். உள்ளத்தில் உவகை துள்ளும்.

**கடகம்**- கடன்தொல்லைகள் கவலையைத் தரும். உறவினருடன் பிணக்குகள் தோன்றும். நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

**சிம்மம்**- நேர்முகப்பரீட்சைக்கு உகந்ததினம். தெய்வத்தின் அருள் தாராளமாய்க் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு இன்று அதிர்ஷ்டதினம்.

**கன்னி**- வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாக கிடைக்கும். நீண்டநாள் பிணி இன்று விடைபெறும். குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

**துலாம்**- வாகனச்சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பை பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும், மேலிடத்து சிபார்சும் கிடைக்கும்.

**விருச்சிகம்**- வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அது மேலும் குட்டிபோடும். பணவிவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும். புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**தனுசு**- வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும். உணவு விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும். வேவுக்கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். நண்பர் ஒருவருடன் மோதல் ஏற்படலாம். அமைதி நன்று.

**மகரம்**- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும், குதூகலமான தினம்.

**கும்பம்**- எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கு இடம் உண்டு. கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்றாகச் சிந்தித்த பின்பு செயலாற்றுக.

**மீனம்**- தெய்வ நம்பிக்கை மேலோங்கிநிற்கும். சிலருக்கு ஆத்மீகவிடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.


ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா சோ நடித்த
ஒளிவிளக்கு

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 630.930
பிறிப்போயா, போயா2-30 மணி
ஜெய்சங்கர் - விஜயநிர்மலா நடித்த
எங்க வீட்டு பெண்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி—சாவித்திரி நடித்த
காத்தவராயன்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
சிவாஜி- பத்மினி நடித்த
தெய்வப்பிறவி
4-30க்கு மட்டும்
NAKED WORLD
(adults)

மனேகரா
யாழ்ப்பாணம்
தினசரி 6-30,10-00
பாலாஜி - E.V சரோஜா நடித்த
சுமங்கலி

REGAL JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Lee Marvin
Vera Miles
in
SERGEANT RAYKER
(Color)

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு நடித்த
அடிமைப் பெண்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்; நாகேஷ்; சரோஜாதேவி மற்றும்பலர் நடித்த
அஞ்சல் பெட்டி 520

7வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே.ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனேரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)
நடிகர் திலகம்
★ சிவாஜிகணேசன்
நாட்டியப்பேரொளி
★ பத்மினி
மற்றும் பலர் நடித்து
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
தில்லானு மோகனும்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் 22 பேருக்கு தூக்குத்தண்டனை

## அரசைக் கவிழ்க்க சதி செய்தார்களாம்

## யு. எஸ். - ஈரான் அரசுகள் உடந்தையென குற்றச்சாட்டு

பாக்தாத், ஜன.22

**ஈராக் அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சி செய்தவர்கள் என்று கருதப்பட்ட 22 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.**

**கடந்த செவ்வாய்க்கிழமையன்று இரவில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாம்.**

**அரசைக் கவிழ்ப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிக்கு மூன்று மேற்கத்திய நாடுகள் உடந்தையாகவிருந்திருக்கின்றன வென்று பாக்தாத் ரேடியோ குற்றஞ்சாட்டியது.**

மரணதண்டனை விதிக்கப்பட்ட 22 பேரில் 5 பேர் பெரிய அதிகாரிகள் என்று கூறப்படுகின்றது.

சதிமுயற்சியை முறியடிகக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்போது இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை உடனடியாகவே விசேஷ நீதிமன்றம் ஒன்று விசாரிக்கத் தொடங்கியது, விசாரணை தொடங்கி 24 மணி நேரத்துககுள் முதல்நபா தூக்கிலிடப்பட்டதாக செய்திகள் கூறுகின்றது.

இந்தச் சதி முயற்சிக்கு அமெரிக்காவும் ஈரானும் மூலகர்த்தாக்களாய்விளங்கியுள்ளனவென்று ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக ஈரான் ஆயுதங்களும் தோட்டாக்களும் கொடுத்துதவியிருப்பதாகவும்சுமார் 3000 யந்திர துப்பாக்கிகள் இரு தடவைகளுல் ஈரானிலிருந்து ஈராக்கிற்கு கடத்திக்கொண்டு வாபப்பட்டிருப்பதாகவும் ஈராக் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

சதி முயற்சியை முறியடிக்க முனைந்து உயிர் துறந்தவர்களின் சடலங்கள் மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டன.

இருவர் சதியில் ஈடுபட்டவர்கள் என்று கூறப்படும் ஒருவருக்கு பத்து ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இருவர் ஆஜராகாதபோதிலும் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

## லிபியாவுக்கு மேலும் 50 பிரஞ்சு விமானம்

பாரிஸ், ஜன.22

லிபியாவுக்கு மேலும் 50 விமானங்களை விற்கப்போவதாக பிரான்ஸ் அறிவித்திருக்கின்றது.

ஏற்கனவே 50 மிராஜ் சண்டை விமானங்களை லிபியாவுக்கு விற்க பிரான்ஸ் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

புதிதாக விற்கப்படவிருக்கும் 50 விமானங்களும் மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது அமெரிக்கா கவலைகொண்டிருக்கின்றது.

மேற்காஸியாவில் ஆயுத சமபலத்தை இது கெடுத்துவிடும் என்று ராஜாங்க அமைச்சர் திரு வில்லியம் ரோஜர்ஸ் குறிப்பிட்டிருக்கிறார்.

மேற்காஸிய நெருக்கடி குறித்து புதிய யோசனையொன்றை வல்லரசு நாடுகளுக்கு தெரிவிக்கப் போவ... சபையில் புகார் செய்துள்ளது.

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு உதவிகள்வழங்கும்வகையில் ஒப்பந்தம் ஒன்றை ஸ்பெயினும் அரபுக் குடியரசும் செய்து கொண்டுள்ளன.

### தயானுக்கு காயம்

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் தயா...

தமிழ்நாடு கவர்னர் உரை

## தமிழாக்கத்தில் புதியசொற்கள்

சென்னை, ஜன. 22

அண்மையில் தமிழ்நாடு மேல்சபை கீழ்சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் கவர்ணர் நிகழ்த்திய ஆங்கில உரையின் தமிழாக்கத்தில் புதிய தமிழ்சொற்கள் சேர்க்கப்பட்டிருந்தன.

கவர்னர், தனது உரையை ஆங்கிலத்தில் வாசித்தார். அதன் தமிழ்ப் பதிப்பில் சில ஆங்கில வார்த்தைகளுக்கு இதுவரை கையாளப்பட்டு வந்த தமிழ்வார்த்தைகளல்லாது புது தமிழ்வார்த்தைகள் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன.

''அசெம்பிளி'' என்ற ஆங்கில வார்த்தைக்கு ''சட்டசபை, சட்ட மன்றம்'' என்றும் மேல்சபைக்கு 'மேலவை' என்றும் இதுவரை தமிழ் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இந்த ஆண்டுசட்டசபைக்கு 'பெருமன்றம்' என்றும், மேலவைக்கு 'சட்டப் பேராயம்' என்றும் கூடியுள்ள இக்கூட்டத்திற்கு என்பதற்குப்பதில் 'ஈண்டி' யுள்ள இக் கூட்டத்திற்கு'' என்றும் எழுதப்பட்டுள்ளன.

அவசரச் சட்டம் ''பிரகடனப் படுத்தப்பட்டது'' என்று இதுவரை எழுதப்பட்டுவந்தது. ஆனால் இந்த ஆண்டு 'சாற்றப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது மசோதா சட்டசபையில்' அறிமுகம்' செய்யப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டு வந்தது. இந்தமுறை முகவுரைக்கப் படுகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில்

## சாட்சியங்களைத் தமிழில் பதிவது சிரமமாக இல்லை

சென்னை, ஜனவரி 22

தமிழ் நாட்டில் நீதிமன்களில் சாட்சியங்கள் தமிழில் பதிவுசெய்யப்பட்டுவருகின்றன. பொதுவாக தமிழ் நாட்டு நீதிமன்றங்களில் பணிபுரியும் நீதிபதிகள் அனைவரும் தமிழில் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பதால் தமிழில் சாட்சியங்களைப் பதிவது சிரமமாக இருக்கவில்லையாம்

சென்னை கோர்டுகளில் சாட்சியங்களைத் தமிழில் பதிவுசெய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இதுவரை கோர்ட்டுகளில் சாட்சியங்கள் ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டுவந்தன கோர்ட் நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழில் நடத்த தமிழக அரசு திட்டமி[ட்டி]ருக்கின்றது.

இதற்கு முதற்படியாக மாஜிஸ்திரேட் சப்-மாஜிஸ்திரேட் ஆகியோர் கோர்ட்டில் சாட்சி சொல்பவர்களின் சாட்சியங்களைத் தமிழில் [பதி]வு செய்யவேண்டும் ...ருந்தது.

தமிழ் தெரியாதவர்கள் மாஜிஸ்திரேட்டாக இருந்தாலோ சாட்சி சொல்பவருக்குத் தமிழ் தெரியாவிட்டாலோதான் ஆங்கிலத்தில் சாட்சியங்களைப் பதிவுசெய்யலாம் என்று அரசாங்க உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

இதையொட்டி சென்னை எழும்பூர், ஜார்ஜ் டவுன், சைதாப்பேட்டை ஆகிய இடங்களிலுள்ள மாஜிஸ்திரேட் கோர்ட்டிகளில் தமிழில் சாட்சியங்களைப் பதிவு செய்யத் தொடங்கினார்கள்.

சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் நடராசன் அவருடைய கோர்ட்டில் நடந்த வழக்கு விசாரணையைத் தமிழில் பதிவுசெய்தார். இதே போல் ... மாகாண மாஜிஸ்திரேட்டுகளும் தமிழில் சாட்சியத்தைப் பதிவுசெய்தனர்.

வேலூரிலுள்ள எல்லா கோர்ட்டுகளிலும் தமிழில் சாட்சியங்களைப் பதி[வு செ]ய்...



சுருவில்-கரம்பன் பிரபல வர்த்தகர் திரு. இளையதம்பி மாணிக்கம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சமாதான நீதிபதியாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு வெளியேறுகையில் எடுக்கப்பட்டபடம்

## நிஜலிங்கப்பா நிறுத்தவேண்டும்

பொங்களூர், ஜன.21

இந்திராகாந்தியைக் கடுமையாகக் குற்றஞ்சாட்டி பேசுவதை பழைய காங்கிரஸ் தலைவர் திரு நிஜலிங்கப்பா இம்மாத இறுதிக்குள் நிறுத்தாவிடில் அவரை எதிர்த்து வேறுசில எம்.பி. களுடன் கிளர்ச்சியொன்றை தாம் துவக்கப்போவதாக மைசூரில் புதிய காங்கிரஸ் தலைவர் திரு எம்.வி. கிருஷ்ணப்பா எம் பி இங்கு கூறினர்.

ராஷ்டிரபதி தேர்தலில்திரு வி.வி. கிரியை ஆதரித்ததற்காக பிரதம மந்திரியை துரோகி என்று திரு நிஜலிங்கப்பாவும் அவரது கட்சிக்காரர்களும் அடிக்கடிகுற்றஞ்சாட்டி வருவதாக திரு கிருஷ்ணப்பா புகார் தெரிவித்தார். அவர் நிருபர்கள் கூட்டத்தில் பேசினர்.

இவர்கள் என்ன பேசினலும் சரி திருமதி இந்திரா காந்தியைக் கவிழ்க்க முடி...

## பண்டகசாலை இல்லை

### மக்கள் அவதி

விஸ்வமடு, வியாழன்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பண்டகசாலை அமைத்துத் தருமாறு தர்மபுர வாசிகளால் சேகரித்து கூட்டுறவுஆணையாளரிடம் வழங்கப்பட்ட சுமார் 3000 ரூபாவும் இதுவரை ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுத்தப்படவில்லை என இப்பகுதி மக்கள் .புகார் தெரிவிக்கின்றனர். இப்பணம் கூட்டுறவுச் சங்கச் சமாசத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டதாம்.

குறிப்பிட்ட பண்டகசாலையை நிறுவி, இப்பகுதி மக்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டுமெனப் பலதடவை இப்பகுதி மக்கள சம்பந்தப்பட்டவர்களை கேட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் குறை கூறப்படுகிறது.

## 'வெடிஅரசன்'

சித்தங்கேணி, வியாழன்

வட்டுக்கோட்டை மேற்கு வீரபத்திர கோவிலில் 7-ம் திருவிழாவாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை 'வெடியரசன்' வரலாற்று நாடகம் மேடையேற்றப்படவிருக்கிறது.

## வரவேற்பு அளிக்கப்படும்

மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறைப் பட்டினசபையின் புதிய உபதலைவருக்கு தையிட்டியில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

தையிட்டி ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினரான சி. நாகரத்தினம் காங்கேசன்துறைப் பட்டினசபையின் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டதைப் பாராட்டு முகமாகமேற்படி கழகம் இவருக்கும் ப. சபை தலைவருக்கும் ஏனைய பட்டினசபை உறுப்பினர்களுக்கும் பாராட்டுவிழா நிகழ்...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

லிபியாவுக்கு விற்க பிரான்ஸ் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

புதிதாக விற்கப்படவிருக்கும் 50 விமானங்களும் மிக உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவையாகும். இவைகளில் 30 மிராஜ் சண்டை விமானங்களும் 20 பயிற்சி உளவு விமானங்களும் அடங்கும்.

லிபியாவுக்கு பிரான்ஸ் விமானங்கள் விற்பது குறி

ரூர்.

மேற்காஸிய நெருக்கடி குறித்து புதிய யோசனை யொன்றை வல்லரசு நாடுகளுக்கு தெரிவிக்கப் போவதாக பிரஞ்சு பிரதம மந்திரி கூறியிருக்கிறூர்.

இஸ்ரேலியர் கடைசியாக தாக்குதல்கள் பற்றி ஜோர்டான் ஐ. நா. பாதுகாப்பு

ளன.

## தயானுக்கு காயம்

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் தயானுக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளன. ஹெலிகொப்டர் ஒன்றில் பிரதமர் திருமதி கோல்டா மெயருடன் வந்து இறங்குகையில் அவருக்கு காயம் ஏற்பட்டது.

கல்லக்குடி

# பெயர்மாற்றத்தில் தத்துவம் அடங்கியிருக்கிறதாம்

## வெற்றி விழாவில் கருணாநிதி விளக்கம்

**கல்லக்குடி, ஜன. 22**

**கல்லக்குடி பெயர் மாற்ற வெற்றியில் தனிச் சித்தாந்த தத்துவமே அடங்கியிருக்கின்றது. தமிழ் உணர்ச்சியுள்ளவர்களுக்கும் தன்மானம் உள்ளவர்களுக்கும் தான் இது விளங்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினர். கல்லக்குடியில் நடைபெற்ற கல்லக்குடி வெற்றிவிழாவில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினர்.**

குன்றக்குடி அடிகளின் சார்பிலும் எம். ஜி. ஆர். சார்பிலும் திரு. கருணாநிதிக்கு பொன்னுடைகள் போர்த்தப்பட்டன. திரு. கருணாநிதியைப் பாராட்டி அமைச்சர் முத்துசாமி எழுதியிருந்த கவிதையை அன்பில் தர்மலிங்கம் படித்தார். கல்லக்குடி கொண்டான் என்ற பட்டயத்தை திரு. ம. பொ. சிவஞானம் வழங்கினர்.

திரு. கருணாநிதி பேசியதாவது:

இங்கே மக்கள் வெள்ளத்தை காணுகின்ற எனக்கு அன்று போர்க்கோலம்கொண்டு நடந்த நிகழ்ச்சிகள் தான் என் கண்முன் வருகின்றன. ஆயிரமாயிரம் உணர்ச்சிகள் தோன்றுகின்றன.

இன்று இந்த வெற்றியை தமிழகமே பிரமாண்டமான முறையில் கொண்டாடுகிறது. அண்ணாவின் மீது ஆணையிட்டுச் செல்கிறேன். இந்த வெற்றியால் எனக்கு கர்வமோ மற்ற எந்த தவறூன எண்ணமோ வராது. இந்தப் பாராட்டு வெற்றி எல்லாம் அண்ணா தந்த கொள்கைக்குக் கிடைத்தவைதான். அவர் காட்டிய கண்ணியத்திற்கு அன்புக்கும் பாசத்திற்கும் கிடைத்ததுதான் இவை அனைத்தையும் கடற்கரையில் தூங்கும் அண்ணன் கல்லறையில் சமர்ப்பிக்கிறேன்.

கல்லக்குடி பெயர்மாற்றம் ஒரு பெரிய வெற்றியா என்று சிலர் கேட்கலாம். இது சாதாரண வெற்றி அல்ல. இதில் தனி சித்தாந்த தத்துவமே அடங்கி இருக்கிறது.

தமிழர்களுக்கும் தமிழ் உணர்ச்சி உள்ளவர்களுக்கும் மட்டும்தான் இது

இந்த வெற்றி கண்டு தி. மு. க. தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை போதும் என்று இருந்து விடமாட்டோம், இந்த வெற்றி ஒரு தூண்டுகோல் தான் என்பதை உணர்ந்து இருக்கிறோம்.

இனி நமது திட்டம் வேலை எல்லாம் மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமை கிடைத்திட நடவடிக்கை எடுப்பது தான். இதற்காக பதவியைக் கூட துச்சமாக தூக்கி எறிந்துவிட்டு போராட்டம் நடத்ததயாராக இருக்கிறேம். அடுத்த திட்டம் அதுவாகத்தான் இருக்கலாம்.

கல்லக்குடி கொண்டான் என்றல் எதிர்ப்பை சமாளித்து வெற்றிபெறுவதாகும். அந்த நிலையை டெல்லியில் உள்ளவர்கள் ஏற்படுத்தாமல் சுயாட்சி உரிமை வழங்கி இந்திரா சுயாட்சி தந்தார் என்ற வரலாற்று சிறப்புமிக்க பட்டத்தை வாங்கிக்கொள்ளவேண்டும்.

அப்படி நிலைமை வராவிட்டால் சுயாட்சி கொண்டான் என்ற பட்டத்தை அவர்களிடம்இருந்து வாங்கும் நிலைமை உருவாகியேதீரும். இதற்காக கருணாநிதி காலத்தில் தரமனம் இல்லாவிட்டாலும் என்போன்ற ஆயிரமாயிரம் வீரர்கள் தோன்றி அதைஅடைந்தே தீருவார்கள் அதற்கான விடிவெள்ளி அரசியல் வானில் தோன்றிவிட்டது.

இந்த விடிவெள்ளியை அரசியல் வானில் உள்ளவர்கள் உணர்ந்து இருக்கிறூர்கள். அதை அறியாத ஜடங்கள் இருக்குமானால் அதை விரைவில் அறிந்துகொள்வார்கள்.

முன்பு தென்மாநிலங்களில் காங்கிரஸ் தான் ஏகபோக ஆட்சியில் இருந்தது. இன்று நிலைமை என்ன? 5 மாநிலங்களில் 2 மாநிலங்களில் தி. மு. கழகம். ஒன்றில் கூட்டணி ஒன்றில் சிண்டிகேட் காங்கிரஸ் ஒன்றில் இண்டிகேட் காங்கிரஸ் என்று ஆட்சியில் உள்ளன இது எதை உணர்த்துகிறது மாநில கட்சிகளுக்குத்தான் வருங்காலம் உண்டுஎன்பதைத்தான்.

பஞ்சாபில் அகாலிதளம் போல் தமிழ்நாட்டில் தி. மு. கழகம்போல் உள்ள கட்சிகளுக்குத்தான் அரசியல் வானில் இடம்உண்டு தமிழ் தமிழ் மக்கள் உரிமைகளைப் பெற இதுபோன்றபலவெற்றிகளை அடையும்காலம்வெகு தூரத்தில்இல்லை.

முன்னதாக கல்லக்குடி ராஜா டாக்கீசில் இருந்து கருணாநிதி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அலங்காரதேரில் அவரை ஊர்வலமாக அழைத்துவந்தார்கள். தேரில் கருணாநிதியுடன் ம. பொ. சிவஞானம், அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் இருந்தனர்.

மாஜிஸ்திரேட் சப்-மாஜிஸ்திரேட் ஆகியோர் கோர்ட்டில் சாட்சி சொல்பவர்களின் சாட்சியங்களைத் தமி[illegible]வு செய்யவேண்டும் என்[illegible] அரசு உத்தரவிட்டி

ஞம் தமிழில் சாட்சியத்தைப் பதிவுசெய்தனர்.

வேலூரிலுள்ள எல்லா கோர்ட்டுகளிலும் தமிழில் சாட்சியங்களைப் பதி[illegible]ய்யத் தொடங்கிவிட்டா[illegible]கள்

# மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

## காமராஜர் ஆதரவு?

சென்னை, ஜன 22

மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்துகொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை காங்கிரஸ் தலைவர் திரு. கே, காமராஜரும் ஆதரிக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

மத்திய அரசுக்கு மாநில அரசுகளுக்குமுள்ளஉறவுகள் குறித்து மத்திய அரசு மறுபரிசீலனைசெய்யவேண்டும் என்று திரு. காமராஜ் மதுரையில் நிருபர்களிடம் கூறினர்.

நிருபர்களுடன் திரு. காமராஜ் பேசியதின் கருத்து:-

மாநிலங்கள் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்க, தன்னிடமிருக்கும் எல்லா அதிகாரங்களையும் தானே இருத்திக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசாங்கம் ஆசைப்படுகிறது. இதுதான் இப்போதுள்ள நிலை, 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பிறகு, அதிக அதிகாரங்களைக் கோரும் போக்கு பளிச்சென்று தெரிய ஆரம்பித்தது. சில மாநிலங்களில் காங்கிரஸல்லாத மந்திரி சபைகள் ஏற்பட்டதையடுத்து இது பளிச்சென்றுதெரிந்தது.

தேர்தல்கள் முடிந்தவுடன், எல்லா முதல்வர்களும் கொண்ட மகாநாட்டைக் கூட்டி அதில்இப்பிரச்னையை பற்றி கலந்தாலோசிக்க வேண்டும் என்று திருமதி இந்திரா காந்தியிடம் யோசனை தெரிவித்தேன். கேரளத்திலிருந்த கம்யூனிஸ்டு கட்சி (மார்க்ஸீயவாதிகள்) தான் இப்பிரச்னையை எழுப்பியது. ஆனல் அதையடுத்து மும்முரமாக அதற்காக முனையவில்லை. ஆனல் அதேசமயம் தமிழ்நாட்டிலுள்ள தி மு. க. சர்க்கார் இதற்காக ஒரு கமிட்டியை நியமித்தது.

புதுத்தொழில்களைத் துவக்குவதற்கான லைசென்ஸ்கள் வழங்கும் பொறுப்பை மாநிலங்களிடம் ஒப்படைக்கலாமல்லவா என்று நிருபர் கேட்டார்.

திரு. காமராஜ் அளித்த பதில் கருத்து பின்வருமாறு:

இது தொழில்கள் ஏறுமாருக வளர்வதற்கு இடங்கொடுத்துவிடும். இத்தொழில்களின் உற்பத்திப் பொருள்களை விற்று முதல் செய்வது பிரச்னையாகிவிடும். இம்மாதிரி நேருமென்று கருதியே திட்டக்கமிஷன் அமைக்கப்பட்டது. தொழில்கள் ஒன்றுகொன்று இணக்கமாகவளம் பெறுவதற்கான திட்டம் வகுப்பதுதான் திட்டக் கமிஷன் பணி.

இந்தியா இனிமேல் கனரகத் தொழில்களில் முனைப்பு காட்டலாகாதென்று நினைக்கிறேன். ஆனல் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு. சிறு தொழில்களில் மட்டுமே முனைய வேண்டும். வேலையின்மை பிரச்னைத் தீருவதற்கு இது வழி செய்யக் கூடும்.

## மன்றம் அமைத்தனர்

கோப்பாய், வியா.

கோப்பாய் வடக்கு கிராமவானெலி ரசிகர் மன்றம் ஒன்று அண்மையில் கோப்பாய் சரவண பவானந்த வித்தியாசாலை மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக் கூட்டம் உணவு உற்பத்தி உத்தியோகத்தர் திரு. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கோப்பாய் வடக்கு கிராம சேவகர் திரு. எஸ். யோகலிங்கத்தின் உரையாற்றியதைத் தொடர்ந்து பின்வருவோர் மன்றத்தின் உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. கே. தர்மலிங்கம், செயலாளர்: திரு. எஸ். ரி. அரசபிள்ளை, பொருளாளர்: திரு. ஏ. சுப்பிரமணியம்.

வித்தார். அவர் நிருபர்கள் கூட்டத்தில் பேசினர்.

இவர்கள் என்ன பேசினுலும் சரி திருமதி இந்திரா காந்தியைக் கவிழ்க்க முடியாது என்று திரு கிருஷ்ணப்பா குறிப்பிட்டார். அடுத்த பொதுத்தேர்தல் வரை மட்டுமின்றி தேர்தலுக்குப் பின்பும் இந்திரா காந்தி பதவியில் நீடிப்பார் என்றூர். நேருவைக்காட்டிலும் இந்திராகாந்திகு மக்களிடையே அதிக செல்வாககு இருக்கும் என்று அவர் மேலும் கூறினர்.

## உடுவில் எம். பி. கெயிரோ செல்வார்

யாழ்ப்பாணம், வியா.

உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் இம்மாதம் முப்பத்திஒராம் திகதி கெயிரோவுக்குப் பயணமாகிறூர்.

இலங்கையில் இருந்து ஐக்கிய அரபுக் குடியரசிற்குச் செல்லும் நல்லெண்ண தூதுக்குழுவில்மேற்படிபாராளுமன்ற அங்கத்தவரும் ஒருவராக விளங்குகிறூர். இலங்கை பாராளுமன்ற அங்கத்தவர்கள் அடங்கிய தூதுக்குழு மூன்று மாதம் வரை ஐக்கிய அரபுக்குடியரசில் இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லெண்ணத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கத்திஞல் இந்நடவடிக்கைகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

## 400 ஏக்கர் வெங்காயம் சேதம்

மூதூர், வியாழன்

திருக்கோணமலையில் சமீபத்தில் பெய்தகடுமழையினுல் 400ஏக்கர் வெங்காயச் செய்கை அழிந்துள்ளது. நிலாவெளி, கும்புறுபிட்டி ஆகிய பகுதிகளில்உள்ள வெங்காயச் செய்கையே அதிக பாதித்துள்ளது.

இந்தப்பகுதிகளைச் சென்று பார்வையிட்ட திருக்கோணமலை அரசாங்க அதிபர்திரு. சோமபாலா குணதேரா விவசாயிகள் அறுவடை செய்த இந்த பழுதடைந்த வெங்காயத்தைச் சந்தைப் படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தோடு தொடர்பு கொண்டு செய்துள்ளார்.

அறுவர் அடங்கிய நிர்வாக கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

கேட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனக் குறை கூறப்படுகிறது.

## வேலையிழக்க நேரிடும்

திருமலை, வியாழன்

திருக்கோணமலை துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் அலுவலக வளவிலுள்ளோ அன்றி அதன் சுற்றுப் புறத்திலோ சூதாடினுல் அல்லது கடதாசி விளையாடினுல் அந்த ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்படுவார்களென துறைமுக சரக்கு கூட்டுத் தாபனம் தனது சகல ஊழியர்கட்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. (பா நி)

## பிணையில் செல்ல உத்தரவு

வல்வெட்டித்துறை வியா

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஈ. வேலும்மயிலும் வி. சுந்தரேஸ்வரன், வி. இரத்தினசபாபதிஆகியோர் அதே இடத்தைச்சேர்ந்த ச. விசுவநாதன், ச. ரகுநாதன் ஆகியோருக்கு கத்தியால் குத்திப்படுகாயம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் படுத்தியபோது மாஜிஸ்திரேட் எதிரிகளை தலா ரூபா 1000பிணையில்செல்லுமாறும் மீண்டும் இம்மாதம் 19-ந் திகதி கோட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டுள்ளார்.

## விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியாழன்

தையிட்டி ஸ்டார் விளையாட்டுக்கழத்தின் 19-வது ஆண்டுக்கான புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவு திரு. சுய்வரதன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருடநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. த. சுயவரதன், உபதலைவர்: திரு. சி. நாகரத்தினம், செயலாளர்: சி. நவரத்தினம், உதவிச் செயலாளர்: சி. வரதராசா, பொருளாளர்: திரு. சு. குணரத்தினம், கைப்பந்தாட்டத் தலைவர்: த. கந்தவனம், உதைபந்தாட்டத் தலைவர்: சி: சத்தியசீலன், விளையாட்டுப்பகுதித் தலைவர்: சி. சற்குணசீலன்.

கழகம் இவருக்கும் ப. சபை தலைவருக்கும் ஏனைய பட்டினசபை உறுப்பினர்களுக்கும் பாராட்டுவிழா நிகழ்த்துவதென முடிவு செய்துள்ளது.

......

## கூட்டுறவு ஊழியர் கூட்டம்

ஊர்காவற்றுறை, வியா

அகில இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்தின் வடபிராந்திய கிளையின் பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 22-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

யாழ் நகர மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கும் இலங்கைக் கூட்டுறவு ஊழியர்களின் மாபெரும் ஊர்வலம் பொதுக்கூட்டம் என்பன பற்றி ஆராயப்படவிருக்கிறதாம்.

## இசைவிருந்து

உரும்பராய், வெள்ளி

சங்கீதரத்தினம் செல்வி ஞானகுமாரி தங்கராசாவின் இன்னிசைவிருந்து இன்று மாலை 7 மணிக்கு நீர்வேலி 'குமாரபுரியில்' நடைபெறவிருக்கிறது.

ஈழத்துப் பட்டம்மாள் என்னும் பாராட்டைப் பெற்ற செல்வி ஞானகுமாரி தங்கராசாவின் இசைவிருந்தில் இராமநாதன் இசைக்கல்லூரி அதிபர். சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளை விசேட விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

## மூன்ருவதுமுறை தெரிவு

கைதடி, வியாழன்

கைதடிக் கிராமசபையின் 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஆர். சிதம்பரன் உபதலைவராக 3-வது முறையும் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த 18மாத காலத்துக்குள் இரண்டுதடவை இவர் தனது உபதலைவர் பதவியை ராஜினுமாச் செய்தபொழுதிலும், கைதடிக் கிராம சபையினர் மீண்டும் 3'வது தடவையாக இவரையே உபதலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்துள்ளனர்.

## காணவில்லையாம்

வேலணை, வியாழன்

வேலணையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணமற் போய்விட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. ச. கிரிவாசன் (வயது 28) என்ற இளைஞரைத் தேடுவதில் ஊர்காவற்றுறைப் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நமது நடவடிக்கைகள் யாவும் சத்தியத்தை மையமாகக்கொண்டிருக்கவேண்டும். சத்தியமே நமது மூச்சுக்காற்ருக இருக்கவேண்டும். நமது முன்னேற்றத்தில் நாம் இந்த நிலைமையை அடைந்துவிட்டால், ஒழுங்கான வாழ்க்கையின் மற்ற விதிகளை அனுசரிப்பது இயல்பான காரியமாகிவிடும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Pos. Box: 49. Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 10-ந் திகதி (23-1-70)


## அமைச்சரும் கூட்டுறவும்

"உப்புச் சமைஞ்சால் தெரியும் உப்பின் அருமை, அப்பன் சமைஞ்சால் தெரியும் அப்பன் அருமை' என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்றும் ஒரு முதுமொழி உண்டு. இந்தப் பழமொழிகள் உப்பின் அத்தியாவசியத்தையே எடுத்துக் காட்டுகின்றன. கடல்நீரில் இருந்துதான் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாடு கடலால் சூழப்பட்டிருக்கிறது. கடலால் சூழப்பட்ட இடம் தீவு என்றழைக்கப்படுவதால் நமது நாடும் இலங்கைத் தீவு என்றழைக்கப்படுகிறது. நாற்புறத்திலும் கடல் இருந்தபோதிலும் நமது நாட்டுமக்கள் உப்புக்காக வெளிநாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய கேவலமான நிலை கூட ஏற்பட்டது. இதை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியளித்துள்ள போதிலும் வேறு எவரும் துணிந்து இறங்காத உப்பு உற்பத்தியில் ஈடுபட்ட வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்களின் சமாஜம் பலவித கஷ்டநஷ்டங்களுக்குள்ளானபோதிலும் அதில் வெற்றிபெறமுடியாமல் போனது துரதிர்ஷ்டமே. ஆனுலும் கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தனுவின் வடபகுதி விஜயம் உப்பு உற்பத்தியில் வலிமேற்கு பலநோக்குக்கூட்டுறவுச்சங்க சமாஜம்அடைந்த இன்னல்களை நீக்கி நாடு தன்னிறைவு காண்பதற்கும் வழிவகுக்க உதவக்கூடிய அறிகுறிகளைத் தோற்றியிருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும்

சங்கானைக்கு விஜயம்செய்த கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் கல்லுண்டாய் உப்பளத்தை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக உப்

திரு. பிலிப் குணவர்த்தனுவைப் பொறுத்தவரையில் அவர் சொல்வீரர் மட்டுமல்ல செயல்வீரருமாவார் என்பதை நாடே அறியும்.

ஒரு நாட்டின் செல்வச் செழிப்புக்கு அரசாங்கத்துறை மட்டுமல்ல தனியார் துறையும் வளர்ச்சியடைய வேண்டும். தனியார்துறையைப் பொறுத்தவரையில் சொந்த இலாபமே முக்கிய குறிக்கோளாக இருக்குமாதலால் அங்கு சுரண்டலுக்கும் இடமிருக்கும். அரசாங்கத்துறையைப்பொறுத்தவரையில் அதற்குப் பொறுப்பானவர்கள் அரசாங்க ஊழியராக இருப்பார்களாதலால் இலாப நஷ்டத்தைப் பற்றி அவர்கள் அதிகம் அக்கறைகொள்ள வேண்டிய அவசியமிருக்காது. நஷ்டமோ இலாபமோ அவர்களுக்கு மாதச் சம்பளம் கிடைக்கும். இதுதவிர அரசாங்க ஊழியர்களிடம் வர்த்தகம் பற்றிய ஆற்றலையோ அனுபவத்தையோ எதிர்பார்க்கவும்முடியாது. கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரையில் அதில் பொதுமக்களுக்கு நிறையப் பங்குண்டு. அவர்கள் எடுக்கும் எந்த முயற்சியிலும் பொதுமக்கள் தலையிடமுடியும். கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு அரசாங்கம் ஊக்கமும் உதவியும் அளிக்கமுன்வந்திருப்பதைப் பாராட்டவேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தில் வடமாகாணம் நல்ல பெயர் எடுத்திருப்பதை இந்த நாடு மட்டுமல்ல வெளிநாடுகளும் நன்கறியும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியையிட்டு வடமாகாணத்தை பாராட்டினுல் மட்டும்போதாது. அது மேலும் மேலும் வளர்வதற்கு உதவியும் ஊக்கமும் அளிக்கப்படவேண்டியது அவசியம்.

கல்லுண்டாய் உப்பளம் பயன்தரக்கூடிய நடவடிக்கை

# பல்கலைக்கழகம்

# முன்னைய கமிஷன்களின் தீர்ப்பையே பின்பற்றுக!

## ஆசிரியர் சங்கத்தின் மகஜர்

**புதியதொரு பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக தேசிய உயர்கல்விசசபைக்கு தேசிய ஆசிரியர் சங்கத்தின் கிளைசசங்கமான வடமாகாண ஆசிரியர்சங்கம் மகஜர்ஒன்றை அனுப்பியுள்ளது. அம்மகஜரில் தெவிக்கப்பட்டகருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன.**

கடந்த 50 ஆண்டுகளாக நாட்டின் உயர்கல்வியில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியினுல் இத்தீவின் பல பகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் நிறுவவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளமை யாவருக்கும் தற்போது தெளிவாகிறது. பல்கலைக்கழகங்களின் உடனடித் தேவையை முன்னிட்டு நீட்ஹாம் குணவர்த்தனு கமிஷன்கள் தமதறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை.

### பிரதேச நிலையம்

கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவவேண்டும் எனக் கூறுவதற்கு மேற்படி இரு கமிஷன்களின் அறிக்கைகளுமே போதுமானவைகளாகும். பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்தியத்திலிருந்து அதிக மாணவர்கள் தொடந்து சென்றுகொண்டிருக்கிருர்கள். மேலும் பலர் உயர்கல்வி பெறுவதற்கான தகைமைகளைப் பெற்றிருந்தபோதும் இடநெருக்கடி காரணமாக இப்பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறஇயலாதவர்களாகவிருக்கிருர்கள். இதன் காரணமாகவே பிரதேசவாரியாக ஒரு புதிய பல்கலைக்கழகம் நிறுவுவது என்ற விடயத்தில் முன்னைய கமிஷன்கள் யாழ்ப்பாணத்துக்கு முதன்மை கொடுத்துள்ளன.

இக்கமிஷன்கள் கூறியவற்றையெலலாம் திரும்பவும் நாங்கள் எடுத்துக் கூறுவது மிகைப்படக் கூறுதலாக முடியும். எனவே இப்புதிய பல்கலைக்கழகம் நிறுவுவது சம்பந்தமாக கருத்திற் கொள்ளவேண்டிய சில கருத்துகளை இங்கு தருகிறோம்

1. யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய அரசாங்க வைத்தியசாலை இருக்கிறது. இது வைத்திய பிரிவு மாணவர்களின் கல்விக்கு ஒரு ஆஸ்பத்திரி அழிக்கவேண்டியபூரண பங்கை அளிக்கக்கூடியது.

2. சமதரையான யாழ்ப்பாணப் பகுதியில் ஆறுகள் இல்லை. வருடத்தின் எப்பருவத்திலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறைவு. எனவே பல்கலைக்கழகத்துக்குச் செல்பவர்களுக்குப் போக்குவரத்துக்குத் தடையேற்படாது.

3. சௌக்கியஅடிப்படையில் போக்கும்போதும் புதிய பல்கலைக்கழகத்துக்கு யாழ்ப்பாணம் பொருத்தமான இடமாகும். நாட்டின் பல பகுதிகளிலுமுள்ளவர்கள் வந்து தங்கி ஒன்று சேர்ந்து கல்வி பயில்வதால் சுகாதாரத்தைக் கருதவேண்டியது முக்கியமாகும். இந்த வகையிலும் மலேரியா நோயற்ற பிரதேசமாக விளங்கும் யாழ். பகுதி தகுந்த இடமாகும்.

### நிலையம்

புதிய பல்கலைகம் அமைக்கப்பட வேண்டிய நிலையத்தை நாம் நோக்கும்போது அது ஒரு பட்டினத்தின் அல்லது ஒரு பெரிய நகரின் எல்லையில் இருப்பது சிறந்ததாகும் இந்த நிலையம் சம்பந்தமாக உங்கள் தேர்வுக்கு நாங்கள் பின்வரும் நிலையங்களை இங்கு தருகிறோம்.

1. பஸ் மூலம் இலகுவாக அடையத்தக்க கோண்டாவிலுக்கும் கோப்பாய் அரசினர் பயிற்சிக்கும் இடையிலுள்ள பகுதி.

2. புகையிரத நிலயத்தை அருகே கொண்ட நாவற்குழிப் பகுதி.

3. ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும், கனிஷ்ட பல்கலைக்கழகமும் அமைந்துள்ள வசாவிளான் பகுதி. இவ்விரு நிறுவனங்களும் விமான நிலயத்திற்கருகே பலாலியில் உளளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையங்கள யாவும் பல்கலைககழக வளவு அமையத்தகக அளவு நிலப்பரப்பைக கொண்டுள்ளவை மேலும் விஸ்தரிப்பதற்கும் தககவையாகவுளளன.

### தரம்

இந்தத் திட்டமிடப்பட்டுள்ள புதிய பல்கலைககழகத்தின் தரம் சகல விதத்திலும் கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களைப் போன்றே சகல வசதிகளோடும் கூடியதாக இருக்க வேண்டும் மாணவர்களை அனுமதிக்கும் விடயத்திலும் அப்பல்கலைக்கழகங்களைப் பின்பற்றியே இன, மத, பிரதேச வேறுபாடற்ற் முறையை கைககொளள வேண்டும்.

இத்தகைய பூரண அம்சங்களோடு கூடிய ஒரு பல்கலைககழகம் எதுவிதத்திலும் கொழும்பு, பேராதனைப் கல்கலைககழகங்களின் தமிழ் பிரிவைப் பாதிககாது என நாங்கள நம்புகிறோம்.

### நிதி

பல்கலைககழகம் நிறுவுவதிலும் அதனைப் பேணுவதிலும் நிதிவசதியளிகக வேறு ஸ்தாபனங்களும் தனியாரும் உ. வி கிடைக

# யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் அவசியம் வேண்டும்

## உயர் கல்விச்சபை முன் தமிழ்காங்கிரஸ்

கோட்டை, வியாழன்

"இராமநாதன் பல்கலைக்கழகம் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும். அதேவேளையில் திருகோணமலை, மட்டக்களப்பு அல்லது நாட்டின் வேறு எந்த இடத்திலாவது ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை நாம் எதிர்க்கிறோம் என்று கூறுவதற்கில்லை. அரசாங்கத்தின் நிதிநிலைமையை அனுசரித்தும் யாழ்ப்பாணத்தில் உள்ள வசதிகளைக் கருத்திற்கொண்டும் யாழ்ப்பாணத்திலேயே இந்தப் பலகலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக் கழகங்களில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

வற்றில் ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டத்துக்கு கூடியசமூகப் புகழும் பதவி அடையாளமும்இணைக்கப்பட்டுள்ளது தற்போது பல்கலைக்கழகங்களில் அனுமதி தேடும் செயல்முறை ஆற்றல் உள்ளமாணவர்களில் பெருந்தொகையினரை விவசாய பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியன அனுமதிக்க வேண்டும். பாரபட்சமான கருத்துக்களைக் கொண்டதன் காரணமாக நாட்டின் அறிவுச்சக்தி அதாவது ஆற்றல் தேசத்தின் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.

பிரச்னைகளுக்கு அர்த்தமற்ற முடிவுகள் எடுக்கப்படுவதை பல்கலைக் கழகங்களிலும், வேறு ஸ்தாபனங்களிலும் உயர் பட்டப்படிப்புக்காக அரசாங்க மற்றும் தொழிற்றுறை நிதி உதவிகளுடன் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளும் ஆராய்ச்சிகளும் தடுப்பதாய் இருக்கும்: இம்மாதிரியான ஆய்வுகள் எல்லாத் துறைகளிலும் தேவைப் படுகின்றன. விஞ்ஞானத்தில் மாத்திரமன்று, சமூகவியல், நூண்கலை, மனிதவியல் போன்ற எல்லாத் துறைகளிலும் இது அவசியம் இப்படியான நிறுவனங்கள் விஞ்ஞான, கலைத் துறைகளில் இனம் தலைவர்களை உருவாக்குவதோடு, அறிவாளிகள் குறைந்து வருவதாக கல்விமான்கள் பலகாலமாகக் கவலைப் பட்டுக்கொண்டிருப்பதையும் தடுக்க முடியும். புவி இயல் அமைப்பின் காரணமாக ஏற்கனவே நாம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளோம். பல்கலைக் கழகங்களும் இம்மாதிரி நிலை ஏற்படாமல் கார்த்துக்கொள்ளவேண்டும். அந்நியமொழிகளைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களைப் பரிமாறிக் கொள்வதற்கு உரிமையிருக்க வேண்டும்,

வெளிநட்டு உதவிகள் விவசாய கைத்தொழில் துறைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன,

நமது பல்கலைக் கழகங்களைக் கட்டுவதற்கு மாணவர்களுக்கு ஆரம்பவசதிகள் கிடைப்பதற்கும் பல்கலைக் கழக நிறுவனங்களில் நவீன வசதிகள் ஏற்படுத்திக்கொள்ளவும் இவ்வாறு வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தினுல் என்ன?

பல்கலைக்கழக நூலகங்களில் குறிப்பெடுக்கும் வசதிகள் இல்லாதிருந்தால் அந்த நூலகத்தினுல் ஒருவர் பயன்பெறுவது சாத்தியமில்லை. இந்த வசதிகள் கூட இலங்கைப் பல்கலைக் கழக நூலகங்களில் இல்லை. இந்த வசதிகள் அத்தியாவசிய பாடப்புத்தகங்களின் தட்டுப்பாடு பிரச்னையை ஓரளவுக்கு தீர்த்து வைப்பதாய் இருக்கும் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் நூல்கள் கிடைப்பதைப் படுமோசமாகப் பாதிப்பதாய் இருக்கின்றது. இது நீக்கப்படவேண்டும்,

இதற்கு முன்னர் வணபிதா தனிநாயகம் அடிகள் யாழ் குடாநாட்டிலுள்ள கல்விமான்களைச் சந்தித்து 1973ம் ஆண்டு இலங்கையில் நடைபெறவிருககும் அனைத்துலக தமிழாராச்சி மகாநாடு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்திஞர், மகாநாடடில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொளளப்படும் விஷயங்கள குறித்து ஆலோசனை கூறுமாறும் அவர்களைக் கேட்டுக்கொண்டார் தேசிய ஒற்றுமைக்கும் தேசிய அபிவிருத்திக்கும் இந்த மகநாட்டுக் கருத்தரங்கு துணைபுரியுமெனவும் அவர் தெரிவித்தார்.

## கல்லுண்டாய்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார தேவைகளைப் பூர்த்தி செய்யக் கிராமத்துக்கு ஒரு பல நோக்கக்கூட்டுறவுச் சங்கம் அவசியம் தேவையாகும் தனிப்பட்ட ஸ்தாபனங்களால்கிராமப்புறத் தேவை

## விழாவுக்கு ஆயத்தங்கள்

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறை வல்வெட்டித்துறை நெல்லியடி ஆகிய உள்ளூராட்சி மன்றங்கள் அடுத்தமாதம் 5-ம் திகதி தொடக்கம் 14 வரை நடக்கவிருக்கும் உள்ளூராட்சி விழாவுக்குத் தயார்செய்ய ஆரம்பித்துவிட்டன.

நெல்லியடிப் பட்டினசபை எட்டாந்திகதி தொடக்கம் விழாவைக்கொண்டாடும்.

இதற்கான ஆயத்தங்கள் டாக்டர் புவிராசசிங்கம், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் திரு. எம். எஸ். சீனித்தம்பி வாணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா உடல் நலப் போதஞசிரியர் திரு. ஏ. கார்த்திகேசு ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவொன்று இதற்கான ஆயத்தங்களை செய்துவருகிறது.

## அபாயயத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் எங்கள் தலைவரே பொறுப்பெடுத்துத் தீர்த்து விட வேண்டும்.'

சங்கானைக்கு விஜயம்செய்த கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் கல்லுண்டாய் உப்பளத் அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக உப் புக் கூட்டுத்தாபன நிபுணர் களிடம் பரிசீலனைக்குவிடுவ தாகவும் அவர்களின் அறிக்கை கிடைத்ததும் அதைக்கொண்டு தாம் காரி யம் செய்யமுடியுமென்றும் கடற்றொழில் தமது அமைச் சின் பொறுப்பிலிருப்பதே இதற்குக் காரணமென்றும் அவர் நம்பிக்கை தெரிவித் திருக்கிறர்.

தற்கு உதவியும் ஊக்கமும் அளிக்கப்படவேண்டியது அவசியம்.

கல்லுண்டாய் உப்பளம் பயன்தரக்கூடிய நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு வாக்குறுதியளித்துச் சென் றுள்ளதைத் தொழில் அமைச்சர் தமது வாக்குறு தியை நிறைவேற்றுவதன் மூலமும் கூட்டுறவு இயக்கம் வடபகுதி யில் மட்டுமல்ல இலங்கை முழுவதிலும் புதிய புதிய துறைகளில் ஈடுபட்டு நாட்டின் முன்னேற்றத்துக்கு உழைப் பதற்கு வழிகாட்டுவாரென்று எதிர்பார்ப்போம்.

ஆயுர்வேத

## பரம்பரை வைத்தியர் சங்க யாழ்ப்பாணக் கிளை

யாழ்ப்பாணம், வெள்ளி அகில இலங்கை பாரம் பரிய வைத்திய சங்கத்தின் பதினேழாவது கிளை கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ்ப் பாணம் நாகவிகாரையில் நடைபெற்ற இக்கூட்டத் திற்கு நாகவிகாரை வண. நந்தாராம நாயக்கா தலை மைவகித்தார்.

கொழும்பு ஆயுர்வேத உபதேச சபையைச்சேர்ந்த அனுமதஸ்ஸு தேரோ இக் கூட்டத்திற்குப் பிரதமவிரு ந்தினராகக் கலந்துகொண் டார்.

சங்கத்தை அங்குரார்ப்ப ணம் செய்துவைத்து அவர் பேசுகையில் ஆயுர்வேத வைத்தியர்களுக்குத் தேவை யான மூலிகைகளை விநியோ கம் செய்வதற்கு மூலிகைத் தோட்டமொன்றை அமைப் பதற்குத் தான் தயாராக விருப்பதாகவும் இன, மத அரசியல் வேறுபாடில்லா மல் இச்சங்கத்தை வளர்க்க அனைவரும் முன்வரவேண்டு மென்றும் சொன்னர்.

இச்சங்கத்தின் போஷகர்க ளாக நந்தாராம நாயக்க தேரோ, அனுமதஸ்ஸு தேரோ, நல்லூர் வட்டார மாநகரசபை அங்கத்தவர் வைத்தியர் நடராசா ஆகி யோர் தெரியப்பட்டனர்.

சங்க நிர்வாகிகள் தெரி வில் தலைவராக திரு. க இராமசாமியும், உபதலைவ ராக திரு. க. மா. தியாக ராசாவும், செயலாளராக க. பரமானந்தமும், உப செயலாளராக திரு. எம். தேவமநூரமும், தனதிகாரி

## உள்ளூராட்சி வார சமாசவிழா

வேலணை, விழா.

உள்ளூராட்சி வாரத்தை யொட்டி தீவுப்பகுதி, நெடுந் தீவு காரியாதிகாரிகளின் பிரிவுகளிலுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையே கலை கலாச்சார விளையாட்டு விழா நேற்று முன்தினம் வேலணை மத்திய மகா வித் தியாலயத்தில் நடைபெற் றது. ஆய்வு உத்தியோகஸ் தர் திரு. ப. பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கரபந்தாட் டம், ஓட்டம், நீளப்பாய் தல், மெதுவான சைக்கிள் ஓட்டம் போன்ற விளையாட் டுப் போட்டிகளும், வில்லுப் பாட்டு, பேச்சு, பாட்டு, நாட கம், கிராமிய நடனம் யோ காசனம், வாத்திய இசை போன்ற கலை, கலாச்சாரப் போட்டிகளும் இடம்பெற் றன.

## ஒருநாள் சம்பளம்

யாழ்ப்பாணம், வெள்ளி வெள்ள நிவாரண நிதிக்கு யாழ்ப்பாணப் பட்டினப் பகு திக் கிராம சேவையாளர்கள் 13 பேரும், யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோர் ஊழியர்களும் தங்கள் ஒரு நாள் சம்பளத்தை நேற்று முன்தினம் வழங்கினர்கள்

(கா நி)

யாக திரு. வி. வன்னிநாயக மும் தெரியப்பட்டனர்

(கா நி)

ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுவதை நாம் எதிர்க்கவில்லை என்று கூறுவதற்கில்லை. அரசாங்கத்தின் நிதிநிலைமையை அனுசரித்தும் யாழ்ப்பாணத்தில் உள்ள வசதிகளைக் கருத்திற்கொண்டும் யாழ்ப் பாணத்திலேயே இந்[illegible] பலகலைக்கழகம் நிறுவப்படவேண்[illegible] நாம் எதிர்பார்க்கிறேம்'

நேற்றுமுன்தினம் தேசிய உயர்கல்விச்சபை முன்னர் சாட்சியமளித்த தமிழ்க்காங் கிரஸ் தலைவர் ஜி.ஜி பொன் னம்பலம், உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் ஆகி யோர் மேற்கண்டவாறுவற் புறுத்தினர்.

தேசிய உயர்கல்விச்சபைத் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா, டாக்டர் ஈ டபிள்யூ அதிகாரம் திரு. சின்னத்தம்பி ஆகியோர் சாட்சியங்களைப் தமிழ் காங் கிரஸ் தூதுக்குழுவிடமிரு ந்து பெற்றுக்கொண்டனர்.

திரு, ஜி. ஜி பொன்னம் பலம், திரு. எம். சிவசிதம் பரம் ஆகியோர் தமது சாட்சியத்தில் தெரிவித்த தாவது:

இராமநாதன் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்என்ற பெயரில் ஒரு பல்கலைக்கழ கத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும். சாதி, மத. மொழி அடிப்படையில் தமிழ் சிங்கள மக்களைப்பிரிக் கும் நோக்கத்துடன் இந்த சாட்சியத்தை அளிக்கவில்லை என்பதை இங்கு வலியுறுத்து கிறேம். அரசாங்கத்திட மிருக்கும் நிதி நிலைமையை அனுசரித்தும், யாழ்ப்பாண த்தில் உள்ள வசதிகளைக் கருத்திற்கொண்டும் யாழ்ப் பாணத்திலேயே இந்தப்பல் கலைக்கழகம்நிறுவப்படவேண் டும் என நாம் கருதுகிறேம். ஆனல், அதேவேளையில் திரு கோணமலை மட்டக்களப்பு அல்லது நாட்டின் வேறு எந்த இடத்திலாவது ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படு வதை நாம் எதிர்க்கவில்லை.

### பேராதனை பலகலைக்கழகம்

நாட்டின் இருபெரும் சமூ கத்தினரினதும் உயர்கல்வி யின் நடுநாயகமாக பேரா தனைப் பல்கலைக்கழகம் திகழ வேண்டும் என்பதே எமது இலட்சியம் அங்கு தமிழ் சிங் கள மாணவர்கள் உயர்தர ஆராய்ச்சிக்கல்வியை பெறக் கூடியதாகஇருக்கவேண்டும்.

### கொழும்பு பலகலைக்கழகம்

கொழும்புப் பல்கலைக்கழ கம், இந்த இரு சமூகத்தவர் களும் நவீன பாடங்களான வர்த்தக நிருவாகம், நிருவா கத்துறை நுட்பங்கள் ஆகிய வற்றைப் படிக்கக்கூடியதும் பல இனமாணவர்களும் கல்வி பயிலக்கூடியதுமான பல்கலைக்கழகமாக மிளிர வேண்டும்.

பல இன மாணவர்கள் கல்விபயிலும் பல்கலைக்கழ கங்கள் இன்று உலகம் முழு தும் உருவாகிவருகின்றன. தொழில்நுட்ப கல்லூரிகளும் உயர்கல்விப் போதனைபுரியும் கல்லூரிகளும் பல்கலைக்கழ கங்களாக உலக நாடுகளில் அந்தஸ்து பெற்றுவருகின் றன. குறிப்பிட்ட ஒருநகரத் தின் சுற்றுப்புறங்களில் வாழும் மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகம் வரப்பிர சாதமாக அமைந்துள்ளது. ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் போன்ற உயர்தர சமூகத் தவர்கள் மட்டும் கல்விபயி லக்கூடிய பல்கலைக்கழகம் இலங்கைக்கு ஒத்துவராது

### யாழ்ப்பாணத்தில அமையவேண்டியதின் அவசியம்

திருக்கோணமலை, மட்டக் களப்பு ஆகிய இரு மாவட் டங்களின் கூட்டான ஜனத் தொகையைவிட யாழ்ப் பாண மாவட்டத்தின் ஜனத் தொகை அதிகமாக இருக் கிறது'

பல்கலைக்கழக க விக்குரிய ஆரம்பத்தளமும் யாழ்ப்பா ணத்தில் நல்லநிலையில் இருக் கிறது.

யாழ்ப்பாணத்தில் நல்ல ஆரம்பபாடசாலைகள் இருப் பதையே நாம் இவ்வாறு குறிப்பிடுகின்றேம்.

மட்டக்களப்பு திருகோண மலை மாவட்டங்களை விட யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்ல நிலையிலுள்ள ஆரம் பப்பாடசாலைகள் 10 மட ங்கு அதிகமாக இருக்கின் றன.

கடந்த சில வருடங்களாக கொழும்பு பேராதனை பல் கலைக் கழகங்களுக்கு அனு மதிக்கப்பட்ட மாணவர் களின் எண்ணிக்கையை ஆராய்வது அவசியம்.

வருடாந்தம் 400 முதல் 500 தமிழ் மாணவர்கள் இந்த இரு பல்கலைக்கழகத் திலும் அனுமதிக்கப்படு கிறர்கள்.

இவர்களின் மூன்றுவருட கல்வி பயிலும் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வருடத்திற்கு 1500 தமிழ் மாணவர்கள் உயர்தரக் கல்வி பயிலுவது புலனு கும்.

வறுமை காரணமாகப் பல்கலைக்கழக கல்வியைப் பெறமுடியாத மாணவர் களும் இருக்கத்தான் செய் கிறர்கள். இவர்களின் எண் ணிக்கை வருடமொன்றுக்கு

சுமார் 100 இருக்கும்.

இதனைவிட சுமார் 200 இலங்கை மாணவர்கள் தென்னிந்தியப் பல்கலைக்கழ கங்களில் கல்வி பயிலுகிறர் கள்.

இவர்களில் பெரும்பான் மையோர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்களே. இந் தப் புள்ளி விபரங்களை ஆராய்ந்து பார்க்கும்போது சுமார் 2500 முதல் 3000 மாணவர்கள் ஒரு புதிய பல் கலைக்கழகம் மூலம் கல்வி பெற முடியும் என்பதுதெளி வாகிறது.

இவர்களில் சுமர் 98 சத விகிதமானேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த வர்களாவர்.

யாழ்ப்பாண மாவட்டத் தின் எந்த ஒரு இடத்திலி ருந்தும் யாழ்ப்பாணததுக்கு வருவதற்கு மிகக்கூடிய தூரம் 20 மைலே. ஆகவே யாழ்ப்பாணத்தில் நிறுவப் படும் இந்தப் பல்கலைகழகத் திற்கு மாணவ விடுதி வசதி கள் தேவைப்படா.

பல்கலைக் கழகம் நிறுவப் படுவதுஒரு அவசரத்தேவை யாகும். அதற்காக முதலில் நாம் இடவசதியும் கட்டிட வசதியையும் ஆராய்வது அவசியம்.

பரமேஸ்வராக் கல்லூரி யின் கட்டிடம் மிகவும் பல மாக இருக்கிறது. இதன் மீதே இன்னும் இரு மாடி களை எழுப்பவும் முடியும்- இங்கு சகல விரிவுரை மண் டபங்களையும் வைக்க முடி யும். நிச்சயம் இந்த இடம் கொழும்பு குதிரைப்பந்த யத்திடலைவிட சௌக்கியத் திற்குஏற்ற ஒரு இடமே.

பரமேஸ்வராக் கல்லூரி யும்' அதுஇருக்கும் காணி யும் அரசாங்கத்தினல் சுவீ கரிக்கப்பட்டிருப்பதினல் எவ்வித சிரமமுமின்றி அர சாங்கத்திற்கு அதில் பல்க லைக்கழகத்தை நிறுவ முடி யும்.

இராமநாதன் கல்லூரியும் அதன் காணியும்அரசாங்கத் தினல் சுவீகரிக்கப்பட்டிருக் கின்றன. அதனைவிட சேர் பொன்இராமநாதனல்ஆரம் பிக்கப்பட்ட கல்வி தரும சாதனத்தின் 25 ஏக்கர் காணியும் அரசாங்கத்தினல் சுவீகரிக்கப்பட்டுள்ளது,

இதுமட்டுமல்ல இதைவிட அதிக மதிப்புள்ள பெரு மளவு காணிகள இந்தக் கல்விதரும சாதனத்தின் கட்டுப்பாட்டில் இருந்துவரு கின்றது, அவற்றின் விபரம்

பல்கலைககழகம் நிறுவுவதி லும் அதனைப் பேணுவதி லும் நிதிவசதியளிகக வேறு ஸ்தாபனங்களும் தனியாரதும் உவிகிடைக ககடிடியதாகவிருந்தாலும் பல்கலைககழகத்தை நிறுவி அதனைப் பாதுகாககும் விஷ யத்தில் தேவையான நிதிககு அரசாங்கமே பொறுப்பாக இருககவேண் டும்.

வருமாறு:

25முதல் 30 ஏக்கர்காணி கோப்பாயில், கிளிநொச்சி யில் 325முதல் 350 ஏக்கர் காணி, அவிசாவளையில் பிருந்தாவனம் தோட்டம். கொழும்பில் காணிகளும் வீடும் இருக்கின்றன,

கொடைகானலில் வீடும் காணியும் உண்டு

காலஞ்சென்ற ஸ்ரீ மழவ ராயாஞல் உருவாக்கப் பட்ட கல்விதரும சாதனத் தின் காணிகள் புத்தூர் சோமாஸ்கந்தர் கல்லூரியில் இருக்கின்றன, இந்த ஆஸ்தி கள யாவும் அரசாங்கத்தி னல் சுவீகரிக்கப்பட்டுளள போதிலும் எவ்வித கஷ்டமு மின்றி பல்கலைக் கழகத்திற் காக இவற்றை அரசாங்கம் பயன்படுத்த முடியும்.

இத்துடன் ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலரின் கல்விதரும சாதனத்தின் ஆஸ்திகளும் மீசாலை ஸ்ரீ வீரசிங்கத்தின் கல்வி தரும சாதனத்தின் ஆஸ்திகளும் இருக்கின்றன. அவற்றையும் அந்தப் பல்க லைக் கழகத்திற்காகப் பயன் படுத்த முடியும்.

மேற்கூறிய காரணங்களுக் காக நாம் இந்த பல்கலைக் கழகத்திற்கு 'இராமநாதன் இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' என பெயர் சூட்டப்பட வேண்டுமெனக் கருதுகிறேம்.

கடந்த ஐந்தாண்டு கால மாக இராமநாதன் பல்கலைக் கழகத்திற்கென அடையாள மான்யத்தின்மூலம் அரசாங் கம் அளித்த வாக்குறுதியை இதனல் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

அதே வேளையில் இலங் கைப் பல்கலைக்கழகத்தின் உயிரியல், பௌதிக வியல் பாடங்களில் போதனபீட மொன்றை திருகோணமலை யிலும், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய அரபு கலாசார போதனபீட மொன்றை மட்டக்களப்பில் நிறுவுவது அவசியமெனவும் நாம் கருதுகிறேம்''

இவ்வாறு சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்க் காங்கிரஸ் தூது குழு மீண்டும் இம்மாதம் 27-ந் திகதி நேர்முக சாட் சியமளிக்கும்.

செய்யக் கிராமத்துக்கு ஒரு பல நோக்கக்கூட்டுறவுச் சங் கம் அவசியம் தேவையாகும் தனிப்பட்ட ஸ்தாபனங் களால்கிராமப்புறத் தேவை களைப் பூர்த்திசெய்ய முடி யாது.

உற்பத்தியாளர் சங்கங் கள், ஐக்கிய நாணய சங்கங் களை ஒருங்கிணைத்தவை தான் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது நாடு பூராவும் 6000 பல நோக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக் கின்றன. 14 000சங்கங்களை அமைப்பதுதான் அரசாங் கத்தின் இலக்கு.

இச்சங்கங்களில் பெரும் பாலானவை இன்றும் வியா பாரத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளன. உற்பத் தித்துறையில் ஈடுபடும் சங் கங்கள் மிகமிகக் குறைவா கவே இன்றும் காணப்படு கின்றன. 3000 சங்கங்களே கடன் தேவைகளையும், நுகர் ச்சியையும்விட மற்றைய தொழில்கள் செய்கின்றன. சங்கங்களில் கடன் கொடுக் கக்கூடிய வசதிஇருக்கவேண் டும் இதனைப் பூர்த்திசெய் யவே கூட்டுறவு அபிவிருத்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட் டன.

இதனல் எதிர்நோக்கிய பெரும் பிரச்னைகளைத் தீர்க்க அரசாங்கம் எவ்வளவோ பாடுபட்டது. இதனைச் சமா ளிக்கமுடியாததாலேயேபண் டாரநாயகா அரசாங்கம் சிதறுண்டது அதுமட்டு மன்றி அவரது உயிரும் பறி போனது அதன்பின் நடந்த சரித்திரங்களை நான் இங்கு விரிவாகச் சொல்லத்தேவை யில்லை.

1960-ம் ஆண்டுக்குப் பின் னர் மக்கள் வங்கிகள் நிறு வப்பட்டன அப்போது நான் எதிர்க்கட்சியிலிருந்தபோ தும் அதனை ஆதரித்தேன். பட்டினப் பகுதிகளில் மட்டு மன்றி சகல கிராமங்களிலும் இதன் கிளைகள் அமைக்கப் பட்டன. இதனது வட்டியும் மட்டுப்படுத்தப்பட்டதா கும்.

கல்லுண்டாய் உப்பளம் பற்றிப்பேசிய அமைச்சர் குறுகிய காலத்துள் அதுஅபி விருத்தி செய்யப்படும் என் றும் உறுதி கூறினர்.

டாக்டர் கெங்காதரம் பிள்ளை நன்றி கூறினர்'

(கா நி)

## தேவை


கொழும்பில்உள்ள கைத் தொழில் நிலையம் ஒன்றிற்கு ஈயஒட்டு வேலைகளும், தகர (Tin வேலைகளும் தெரிந்த ஆட்கள் உடன் தேவை. இடவசதி அளிக்கப்படும் நேரில் வரவும். 34, கன்னு திட்டி வீதி, யாழ்ப்பாணம்.

1643


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் எங்கள் தலைவரே பொறுப்பெடுத்துத் தீர்த்து விட வேண்டும்.'

இன்று பிற்பகல் சாவகச் சேரி தாமோதரம்பிள்ளை அரங்கில் நடைபெற்றதமிழ் காங்கிரஸ் தொழிற்சங்கங் களைச் சேர்ந்த தொழிலா ளர் மகாநாட்டில் வரவேற் புரை நிகழ்த்திய சுருட்டுத் தொழிலாளர் பிரதிநிதி திரு சி. முதலியார் மேற் கண்ள்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகை யில், அனேக இடங்களில் தொழிலாளர்கள் மிகவும் சுகாதார வசதி யில்லாமல் தொழிற்சாலை களில் வேலைசெய்யவேண்டி யிருக்கிறது, அநேகமாக 50 வீதம் தொழிலாளர்கள் தகுதியற்ற தொழிற்சாலை களில் மிகவும் குறைந்த வசதிகளுடன் கஷ்டப்பட்டு வேலை செய்கிறர்கள். இதை உடனடியாக சுகா தாரப் பகுதியினர் நேரில் சென்று பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண் டும்' என்றர்

## காங்கிரஸ்

(1-ம் பககத்தொடர்ச்சி)

திரு எஸ், பி, மயில்வாக னம், திரு வின்ஸன்டீ போல் திரு நூர் முகம்மது.

பொதுச் செயலாளர்: திரு வீ ஆனந்தசங்கரி இணைச் செயலாளர்கள்: திரு மகேந் திரராசா, திரு குமார் பொன்னம்பலம், பொருளா ளர்: திரு நா தில்லைச்சிற் றம்பலம். அமைப்புச் செய லாளர்கள்: திரு செந்தில் ராஜா திரு, மாணிக்கவாச கர் நிர்வாகசபையும்தெரிவு செய்யப்பட்டது,

காங்கிரஸ் வாலிப முன் னணி இயக்கங்களின் பிரசா ரத்திற்கென அகில இலங் கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாணம் ஆட்சிமன்ற உறுப்பினரு மான திரு ஜி ஜி பொன் னம்பலம் ஒரு மோட்டார் காரும் ஒரு ஒலிபெருக்கி யும் கொடுப்பதாகத் தெரி வித்தார்,

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ் வரன் ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை வித்துவான் திரு க. கி. நட ராசன் பெரியபுராண விரி வுரைத் தொடரில் 'இரு பெருந்தகையார்' என்ற பொருள் பற்றிய பிரசங் கம் நிகழ்த்துவார்- இரவு 7 மணிக்கு சுக்கிர வார அம் மன் உற்சவமும் நிகழும்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 63-ம் இல க்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரிமாதம் 23-ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org